12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 6—8—1978 | இதழ் 48

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

காட்சி-4

[ஊர்ப் பொது மண்டபம்- அங்கே அண்ணாச்சி, நொண்டி; மற்றும் ஊர் மக்கள் இருக்கிறார்கள். முடிநரைத்த ஒரு முதியவரும் அமர்ந்திருக்கிறார்]

நொண்டி : இன்று நமது ஊர்ப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிற இந்தக் கூட்டத்துக்கு நமதுஊர்ப் பெரியவர் நல்லான் அவர்களையே தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இதை நம்ப அண்ணாச்சியார் அவர்கள் ஆமோதிப்பார்.

அண்ணாச்சி : நான் ஆமோதிக்கிறேன்.

(பெரியவர் நல்லான் தள்ளாடியவாறு எழுந்து)

நல்லான் : எனக்கு ரொம்ப வயசாயிடுச்சி! என்னை ஏன் இந்த விவகாரத்திலே எல்லாம் இழுக்குறீங்க? பரவாயில்லை... பொதுவா ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்ப ஊர் வர வர ரொம்ப கெட்டுகிட்டு வருது. நம்ப ஊர்ல உள்ள சின்ன பிள்ளைகளும் பெரியவுங்களும் ரொம்ப நல்லவுங்கன்னு பேரு எடுத்தவுங்க? ஆனா, கொஞ்ச நாளா திருட்டு, கொலை, கள்ளச் சாராயம் காய்ச்சறது அப்படி இப்படின்னு படு பேஜாராப் போயிடுச்சி...

நொண்டி : தலைவர் சொல்றது நூத்துக்கு நூறு உண்மை! சில பசங்க கொள்ளையடிக்கிறானுங்க சில பசங்க ஊழலிலேயே கிடந்து மிதக்குறாங்க!

அண்ணாச்சி: ஆமாம்! ஆமாம்! இதோ அதற்கு சாட்சி! என்னால் சரியாகப் பேச முடியாததால் என்சிநேகிதன் ஒருத்தன் எழுதிக் கொடுத்ததை அப்படியே படித்துக் காட்டுகிறேன். அதாவது; 'கொள்ளைக்காரர்கள் கொழுத்து விட்டார்கள்!

ஊழல் பேர்வழிகள் நிறைந்து விட்டார்கள்!

இலஞ்சம் கொஞ்சுகிறது!

மஞ்சம் கெஞ்சுகிறது!

நமது ஊர் வாய்க்கால் மணக்கிறதா?

வரப்பு ஓரங்கள் சுவைக்கிறதா?

குட்டையில் குளிக்க முடிகிறதா?

ஏரிகள் எல்லாம் எரிந்து கருகி விடவில்லையா?

பாலங்கள் எங்கே?

கோலங்கள் எங்கே?

வீசுகிறது சாராய வாடை வீதியிலே!

வீண் செலவுகள், விரயங்கள்! ஊழலோ ஊழல்கள்!''

[அண்ணாச்சி படித்ததும் அனைவரும் கைதட்டுகிறார்கள். பெரியவர் நல்லான் மட்டும் பலமாகச் சிரிக்கிறார். அப்போது பொடியன் ''சபாஷ்! சபாஷ்'!'' என்று கூறிக் கொண்டு 'விசில்'' அடித்தவாறு அங்கேவருகிறான் ஆட்டம் போட்டபடி]

நல்லான் : அடுக்கடுக்காய் படிச்சேப்பா! அழகாத்தான் இருந்தது! ஆனா ஒண்ணு' இந்த ஊர் மக்கள் மத்தியிலே ஒண்ணு சொல்றேன்......டேய்! அண்ணாச்சி! டேய்! நொண்டி! கொள்ளைக்காரன் — கொலைகாரன் — ஊழல் பேர்வழி — 'சுரண்டல் பேர்வழி — சமுதாய விரோதி — சாராயம் காய்ச்சறவன் — அப்படின்னு ஆக்ரோஷமாப் பேசுறீங்க! எவனோ ஒருத்தன் எழுதிக் கொடுத்ததைப்படிக்கிறீங்க! எனக்குத்தெரியும் எல்லா உண்மையும்! இப்பவே இங்கேயே வெட்ட வெளிச்சமாக்குவேன்- ஊர் ஜனங்களே, கேளுங்க! நாங்கதான் தும்பைப்பூ — தூய்மையானவுங்க — மற்றவங்க எல்லாம்; களங்கமுள்ளவுங்க- அப்படின்னு இவுங்க பேசுறதுக்குக் காரணமே — இவுங்க ஊழலை மறைக்கிறதுக்குத் தான்.

நொண்டி : ஏ. கிழட்டுப் பயலே என்னசொன்னே?

அண்ணாச்சி ; டேய், வயசான கழுதைக்குத் திமிரைப் பார்த்தியா?

நல்லான் : திட்டுங்கடா! நல்லா திட்டுங்க — ஊர் ஜனங்களே! நீங்க வேடிக்கை பார்த்துகிட்டு இருக்கீங்களே; அவனுக என்னைத் திட்டுறது உங்களுக்கு இனிப்பா இருக்கா?

ஊர்மக்களில் ஒருவர் : அய்யா நீங்க பெரியவுங்க! உங்களை கடுமையான வார்த்தை சொல்லித் திட்டினது தப்புதான்! இருந்தாலும் நீங்க அண்ணாச்சி, நொண்டியப்பன் இரண்டு பேரையும் பார்த்துஊழல் பேர் வழிகள்னு சொல்லியிருக்கக் கூடாது!

நல்லான் : நான் ஆதாரம் இல்லாமல் எதையும் சொல்லலே! ஊர்லே உத்தமன் மாதிரி வேஷம் போட்டுகிட்டு ஜனங்ககிட்ட பெரிய மதிப்பும் மரியாதையும் பெத்துகிட்டு ஜம்பம் அடிக்கிறானுங்களேன்னு நான் யோசிச்சுபாத்தேன் நான் யாரு? ரிடயர்டு ஹெட் கான்ஸ்டேபிள் இல்லையா? இந்த மாதிரி ஆளுகளைப் பத்திக் கொஞ்சம் கொஞ்சம் தெரியுமில்லியா? அதுக்காக என் பேத்தி சொக்கியையே இவுங்க கூட்டத்திலே போயி உளவு பார்க்க அனுப்பி வச்சேன்... அவ வந்து எல்லா விவரமும் என் கிட்ட சொல்லிட்டா'.....

ஊர்மக்கள் : (ஒருமித்த குரலில்) அப்படியா அடா அநியாயமே!

(இப்படி ஊர்மக்கள் வியப்புடன் கூவியது தான் தாமதம் — அண்ணாச்சியும், நொண்டியும், பொடியனும், தங்களிடமிருந்த நீண்ட கம்புகளால் ஊர்மக்களை அடிக்கத் தொடங்கினர், அடி தாங்காத ஊர்மக்கள் ''அய்யோ! அம்மா!!'' என்று அலறிக்கொண்டு சிதறி ஓடுகின்றனர். முதியவர் நல்லான் மட்டும் அப்படியே அசையாமல் நின்று கொண்டிருந்தார் அண்ணாச்சியும் நொண்டியும் அவரது

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

கண்ணீரைத்துடைக்கிறார் கலைஞர்-
'கண்துடைப்பு' செய்கிறார் நடிகர்!

விழுப்புரத்தில் அண்மையில் ஏற்பட்ட துன்பச் சம்பவங்கள் நேரில் கண்டவர்களை இரத்தக்கண்ணீர் வடிக்கச் செய்திருக்கிறது. செய்தித்தாள் மூலமாகப் படித்து அறிந்தோர்க்குச் செந்தேள் கொட்டியது போல ஆகியிருக்கிறது.

கோட்டையிலே அமர்ந்திருக்கின்ற கோலேந்திகள் "பதின்மூன்று பேர்களின் உயிர்களே பறிக்கப்பட்டன" என்று பதட்டமில்லாமல் பதிலளிக்கிறார்கள் எதையும் மறைத்தே கணக்குக்காட்டிப் பழக்கப்பட்டவர்கள் அல்லவா? திரையுலகக் கணக்கில் தேர்ச்சி பெற்றவர்கள் அல்லவா! வெள்ளைக் கணக்குப்படி பதின்மூன்றே கறுப்புக் கணக்கோ கணக்கில் அடங்காது! நூற்றுக்கு மேற்பட்டவர்கள்-இருசாராரையும்சார்ந்தோர் கொல்லப்பட்டிருப்பதாகத் தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தோர், அது மட்டுமல்ல.....

ஐந்நூற்றுக்கு மேற்பட்ட குடிசைகளும், கூரைவேய்ந்த வீடுகளும் தீக்கிரையாகி உள்ளன குடும்பம் குடும்பமாக வீடுகளை இழந்தோர்கள் வீதியிலே கண்ணீர் உகுத்தபடி காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள், கடைகள் பலவற்றை வன்முறையில் ஈடுபட்டோர் சூறையாடியது மட்டுமல்லாது மண்ணெண்ணெயை ஊற்றித் தீவைத்தும் கொளுத்தி மயானமாக்கி விட்டார்கள். பல இலட்சக்கணக்கான மதிப்புள்ள சொத்துகளும் பொருள்களும் தீக்கு இரையாகி விட்டன. உடுத்த மாற்றுடையில்லாது கூடத் திக்கற்றவர்களாக தெருவிலே அலைந்து கொண்டிருக்கிறார்கள்

இப்படிப்பட்ட கொடுமையான சம்பவம் இதுவரை விழுப்புரம் பகுதியில், ஏன் தமிழ்நாட்டிலே கூட நடந்ததில்லை என்று வேதனையோடு சொல்லுகிறார்கள்

அந்தப் பகுதியில் வாழும் மக்களில் இருசாராருக்கு ஏற்பட்ட மோதுதல் ஒரு நாளல்ல இரண்டு நாட்களல்ல நான்கைந்து நாட்கள் இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் யுத்தம் போன்று — நடைபெற்று இருக்கின்றது; ஆட்சி நடத்துகின்ற வர்க்கம் காவல்நிலையம் அங்கே இருக்கிறது. ஆர்டிஓ போன்றவர்கள் அலுவலகத்தில் இருந்திருக்கிறார்கள். வேண்டிய அளவிற்குப் போலீஸ் தேவையென்றாலும் தொலைபேசி அலுவலகமே இருக்கிறது சென்னைக்குச் செய்தி தெரிவிக்க.

இவ்வளவு வசதியும் வாய்ப்புகளும். போலீஸ் அதிகாரிகளும் நிர்வாக அதிகாரிகளும் சம்பவம் நடைபெறுகின்ற அருகிலேயே இருந்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்காதது ஏன்? பூவையிலே கிள்ள வேண்டியதை கோடரி கொண்டு வெட்டவேண்டிய நிலைக்கு ஏன் அந்த கோரச் சம்பவம் தொடர்ந்து நடைபெற்றது. பரங்கிமலைபோல் பளிச்சென உண்மை நாட்டிற்குத் தெரிந்தது.

விழுப்புரம் மண்ணையே அந்தச் சம்பவம் சிவப்பாக்கி விட்டது. இதயமுள்ளவர்கள் எல்லாம் இரக்கம் காட்டினர். காவல் துறையினர் வன்முறைச் சம்பவங்களைக் கண்டும் வாய்மூடி மௌனிகளாக இருந்ததேன்? தடிகளை ஏந்தியுள்ள போலீஸ்காரர்கள் தயக்கம் காட்டியதேன்? துப்பாக்கியை ஏந்திக்கொண்டிருந்த காவல் துறை அதிகாரிகள் கொலைச் சம்பவ நிகழ்ச்சியின் போது கைகளைக் கட்டிக்கொண்டிருந்ததேன்?

கலவரத்தை ஒடுக்க எம் ஜி ஆர் தமது ஆட்சியில் எங்கும் துப்பாக்கிப் பிரயோகம் இதுவரை நடைபெறாதது போலவும். கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு எங்கும் வீசாதது போலவும் பாசாங்கு செய்கிறார்

சினிமா புகழ் விவசாயி எம். ஜி ஆர் ஆட்சியில்தான். எட்டு ஏழை விவசாயிகள் பட்டப் பகலில் போலீஸ்காரர்களால் சுட்டுத் தள்ளப்பட்டனர் தாலி அறுபட்ட தாய்மார்களின் ஓலம் இன்னும் தமிழ்நாட்டில் ஓய்ந்தபாடில்லை

விழுப்புரத்தில் விழுந்த கொலை, நடந்த கொள்ளை. எரிந்த இல்லங்கள் இழந்த சொத்துக்கள், பறிகொடுத்த செல்வம் பற்றியெல்லாம் கேட்ட நெஞ்சங்கள் கொதித்தெழுந்தன அனாதையாகி விட்ட அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறிடவும் நடந்துவிட்ட கோரச் சம்பவங்களை கொடுமை நிறைந்த நிகழ்ச்சிகளை நேரில் கண்டு உறங்குகின்ற அரசுக்கு உரத்த குரலில் எடுத்துக் கூறவும் திமுகழகத்தின் சார்பில் பொருளாளர் சாதிக் பாட்சா தலைமையில் சு பாலன் எம். எல் ஏ வழக்கறிஞர் சந்திரன் ஜெபால் எம். எல் ஏ. ஆகியோர் விழுப்புரத்திற்கு உடனடியாகச் சென்று பார்த்தனர்

நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தால் மின்சார பல்புகள் நொறுக்கப்பட்டன இரவில் விளக்கு எரிவதில்லை பகலில் கூட கொடுமைச் சம்பவத்தின் எதிரொலியால் பீதி அடைந்து விட்டவர்கள் வீட்டின் கதவுகளைச் சாத்திக்கொண்டு உள்ளேயே இருந்தனர்

நகரின் வீதிகளெல்லாம் வெறிச்சோடி யிருந்தன மக்கள் நடமாட்டம் மருந்துக்குக்கூட இல்லாத நிலை கடைகளோ திறக்கப்படவில்லை அன்றாடம் காய்ச்சும் குடும்பங்கள் கூலி வேலைக்குப்போக முடியவில்லை. அந்த ஏழைக் குடும்பங்களின் அடுப்புகள் கூட விடுமுறை எடுத்துக் கொண்டன இதனுடைய விளைவால் அந்த ஏழைகள் பட்டினியைச் சந்தித்தனர் ஒட்டிய வயிற்றுடன் பசியால் அழுதுகொண்டிருந்த பச்சிளம் குழந்தைகள் ஒரு பக்கம்.

உள்ளத் துணிவோடும் இலட்சிய வெறியோடும் திமு. கழகத்தின் முன்னோடிகள் விழுப்புரம் சென்றனர்; பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டனர் நடந்து விட்ட கோரச் சம்பவங்களைக் கேட்டறிந்தனர். தாயைக்கண்ட சேயைப்போல மக்கள் அவர்களைக் கண்டதும் ஓடோடி

நா. கணேசன்

வந்தனர். மகனைப் பறிகொடுத்த தாயும். கணவனை இழந்த மனைவியும் தாயைப் பறிகொடுத்த மகனும் "சாதிக்"கைக் கண்டதும் கதறி அழுதனர்; கண்ணீர் விட்டனர் உண்மைச் சம்பவங்களை ஓலமிட்டவாறே எடுத்து உரைத்தனர். கல்லும் கரையும் என்பார்கள். இந்தக் கண்ணீர்க் கதையை நேரில் கேட்டதும் இதயம் உள்ளவர்கள் ஆயிற்றே இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைக்க ஆறுதல் கூறினர். அரசு ஆவன செய்திட அதற்கான துரித நடவடிக்கைக்குத் தூண்டுகோலாக இருப்போம் என்று உறுதி மொழி கொடுத்தனர்.

இந்தச் சம்பவங்களுக்கு ஒருசிலரின் வன்முறை போக்கே காரணம் தேவையில்லாதபோது அமைதியான மக்கள் மீது தடியடி செய்து கண்ணீர்ப் புகைக் குண்டு வீசி துப்பாக்கியால் உயிரைக்குடிக்கும் காவல் துறையினர் நடைபெற்ற சம்பவங்களை நேரில் கண்டும் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் அரசு உத்தரவு பிறப்பிக்கவில்லையாம் 'பனையினில் தூங்கியவன் வெற்றியிழந்தான்' என்ற பாடல் வரிகளுக்கு வாயசைத்த எம். ஜி. ஆர்., இதற்கு உத்தரவு போட வாயசைக்காதது ஏன்? நடிக்கத் துடிக்கும் எம் ஜி ஆர். நடவடிக்கை எடுக்காதது ஏன்?

தனது அமைச்சரவையிலே உள்ள வீரப்பன் சௌந்திர பாண்டியன் ஆகியோரை அனுப்பி வைத்தார் விழுப்புரத்திற்கு வீரம் மிகுந்த இந்த மாண்புகள் வேகமாகக் காரில் சென்றனர் இரத, கஜ. துரக பதாதிகளும் உடனிருந்தன பாதிக்கப்பட்ட மக்கள் கண்ணீரும் கம்பலையுமாய் வீதியிலே இருந்தனர் அமைச்சர்கள் வருகிறார்கள் ஆறுதல் கூறுவார்கள் உதவிகள் செய்வார்கள் என்று ஏக்கத்தோடு எதிர்பார்த்தனர். வந்த அமைச்சர்கள் மக்களைச் சந்திக்கவில்லை.

ஆட்சியிலே உள்ளவர்கள் மதுரையிலே அடைந்து விட்ட வெற்றியிலே ஆனந்தக்கூத்து ஆடிக்கொண்டிருந்தனர். மாலைகள் குவிந்தன மலைபோல அதனால் வெற்றி மயக்கத்தில் ஆகவே காவல்துறையும் அதிகார வர்க்கமும் செயலாற்றவில்லை அச்சத்தின் விளைவு போலும் விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுத்தனர் அதிகார வர்க்கம் அமைச்சர்களை முற்றுகையிட்டது கடமையைச் செய்யத் தவறிவிட்ட அதிகார வர்க்கத்துக்குப் பாராட்டுத் தெரிவித்து விட்டுப் புறப்பட்டனர் கோட்டையை நோக்கி காங்கிரசுக் கட்சியின் மூப்பனர், ஜனதாகட்சியின் சந்திரசேகர் ஆகியோர் விழுப்புரம் சென்றனர் விழுந்துவிட்ட பிணங்களின் எண்ணிக்கையை ஊகித்து எடுத்துக் கூறினர்" நடந்துவிட்ட கொடுமை மிகுந்த சம்பவங்களுக்கு அரசின் மந்தப் போக்கே காரணம். ஆட்சியின் அதிகார இயந்திரம் இயங்கவில்லையே" என்று தங்கள் வேதனையை வெளிப்படுத்தினர்.

விழுப்புரத்து நிகழ்ச்சி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கதவைத் தட்டியது. கதவு திறக்கப்படவில்லை; கருணையும் பிறக்கவில்லை

ஆயிரத்து ஐந்நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள டில்லிச் செங்கோட்டையின் கதவைத் தட்டியது. கதவு திறந்தது.

கழகத்தின் துணைப்பொதுச் செயலாளர் ஏவிபி ஆசைத்தம்பி நாடாளு மன்றத்தில் விழுப்புரம் பிரச்னையைப் பற்றி எடுத்துக் கூறி உடனடியான பரிகாரம் தேடவேண்டும் என்று வாதாடினார் மாநில அரசு மந்தமாகச் செயல்பட்டாலும் மத்திய அரசு தனது கடமையைச் செய்ய தவறவில்லை நாடாளு மன்றக் குழு விழுப்புரம் சென்று நடந்துவிட்ட சம்பவத்தைப்பற்றி நேரில் கேட்டு அறிந்து அறிக்கை அளிக்க நடவடிக்கை எடுக்கும் இதுவே மத்திய அரசு ஆணை. அது காட்டிய ஆர்வத்தை. அக்கறையை. காலத்தோடு செய்யும் கடமையை இதயம் உள்ளோர் எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. முதலமைச்சர் இராமச்சந்திரனுக்குக் கோபம் மூட்டிக்கொண்டு வந்து நாடாளு மன்றக் குழுவின் வரவைக் கண்டிக்க முனைந்துவிட்டார்.

பின் மத்ய அரசை மரியாதை போடு கெஞ்சுகிறார் குழுவை அனுப்ப வேண்டாமென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக உத்தரவாதம் தருகிறார். மத்திய அரசு மாநில அரசின் வேண்டுகோளுக்கு இணங்க 'குழுவை . அனுப்பவில்லை என்றும் அறிவித்துவிட்டது.

சம்பவம் நடந்த இடத்தின் மக்களைச் சந்திக்க மறுக்கிறார் முதல்வர்.

கழகத் தலைவர் கலைஞர் விழுப்புரம் நிகழ்ச்சிக்கு வேதனைப் பட்டார். ஆட்சியில் இல்லாவிட்டாலும் தன்னால் ஆனதைச் செய்ய வேண்டும் என்ற கருணை உள்ளத்தோடு விழுப்புரத்துக்குச் சென்றார்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)



விழுப்புரத்தில் கழகத் தலைவர் கலைஞரிடம் தாய்மார்கள் கதறியழுது தங்கள் வேதனையை எடுத்துக்கூறும் காட்சி.

நம் நாடு
விற்பனையாளர்கள்
கவனிக்க

10 8·78 க்குள் பட்டியல் தொகையினை அனுப்பாதவர்களுக்கு 16—8—78 ந்தேதிய இதழ் அனுப்பப்படுவது கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி

எம். ஜி. ஆரை எப்படி நம்புவது?

தென்மாநில முதல்வர்கள் மாநாடு சென்னையிலே கூடியது

அண்டை மாநில முதலமைச்சர்களான சென்னா ரெட்டியும், தேவராஜ் அர்ஸும், அந்தோணியும் கலந்து கொண்டனர்.

யூனியன் பிரதேச முதலமைச்சர் ஒருவரும் கலந்து கொண்டதாக பத்திரிகையில் புகைப்படம்காட்டியது. கூடிய மாநாடு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது போல், மெள்ள மெள்ள நம்மைவிழுங்க வரும் இந்தித் திணிப்பு எனும் புலியை எதிர்த்து விரட்ட என்று சொல்லிக் கூடினர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து மத்திய அரசுக் கெதிராகத் தீர்மானம் நிறைவேற்றுவார்கள் என யாவரும் எதிர்பார்த்தனர்—நேரு கொடுத்த உறுதி மொழியைச் சட்ட வடிவமாக்கக் குரலெழுப்பக் கோரப் போகிறார்கள் என்று மக்கள் எதிர் பார்த்தனர்—

இந்தித் திணிப்பை அறவே ஒழிக்கக் கோரும் விதமாய் சட்டத்தை திருத்தக் கோரித் தீர்மானம் நிறைவேற்றப் போகிறார்கள் என்று தமிழர்கள் அனைவரும் நம்பியிருந்தனர்.

நம்பிக்கையுடனிருந்தவர்கள் ஏமாற்றத்திற்குள்ளாகும் விதமாய், கூடிப் பேசியவர்கள் எதுவும் செய்யாமல் கலைந்து சென்றனர்.

இதைத்தான்-அ தி மு க.வினர் "வெற்றி வெற்றி... மகத்தான வெற்றி! மாநில முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்ட எம் ஜி. யாரால் தான் முடியும்—முடிந்தது" என்றுவீராப்புப் பேசிக்கொள்ளுகின்றனர்.

மந்திரக் கோல் மைனர் கூட—"ஏழாண்டுக் காலத்தில் கருணாநிதியால் கூட்ட முடியாத முதலமைச்சர் மாநாட்டை ஓராண்டுக் காலத்தில் எம். ஜி ஆர். கூட்டிவிட்டார்; மகத்தான சாதனை" என்று தற்பெருமை பேசியிருக்கிறார். அ தி மு. க. ஆட்சியின்

★★★★★★★★★★★

குடியேற்றம்
சுப்பிரமணியம்

★★★★★★★★★★★

ஓராண்டுச்சாதனையில் இதுவும் ஒன்றா?' என்று கூர்ந்து நோக்கியபோது அவர் கூட்டிய மாநாடு 'டிராவல்' முடிந்திருப்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் மட்டும்தான் இருமொழிக் கொள்கை நடைமுறையிலுள்ளது.

அதைத் துணிச்சலாகப்பிரகடனப்படுத்திய பெருமை அண்ணாவைச்சாரும்.

அண்ணாவின் கொள்கைகளுக்கு அணுவளவும் பழுது நேராவண்ணம் பாதுகாத்த பெருமை கலைஞரைச் சாரும்.

மக்கள் எதிர்ப்புக்குப் பயந்துதான் இப்போதிருக்கும் ஆட்சியாளர்களும் இருமொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சென்னா ரெட்டியும் தேவராஜ் அர்ஸும் ஏற்கெனவே தங்கள் மாநிலத்தில் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்திவிட்டுதான் பெயரளவிற்கு இந்தித் திணிப்பை எதிர்க்கின்றனர்

கர்நாடக அவர்களிருவரும் இ. காங்கிரஸைச் சேர்ந்தவராவார்கள்

கூடிக் கலைந்தவர்களின் கருத்துக்களை டெல்லிப் பத்திரிகைகள் விமரிசித்துள்ளன அதில் "எம் ஜி. யாரை எப்படி நம்புவது? அவர் பிரச்சினைகளில் நழுவிவிடுவாரே" எனும் கருத்துப்படக் கூறியுள்ளன

எம். ஜி யாரின் சொல்லும்—செயலும் தமிழக மக்கள் அறிந்ததுதான் என்பதால் ஆச்சரியப்படவில்லை இதைவிட "இந்தித் திணிப்பிற்கெதிராக அரசியல் சட்டத்தைத் திருத்தக் கோருவதை நான் ஆதரிக்கமாட்டேன்" என்று எம் ஜி யாரிடமே கூறிவிட்டேன் என்று தேவராஜ் அர்ஸ் கூறியதாக வெளியான தகவல்தான் தமிழ் மக்களின் கவனத்தைக் கவர்ந்தது.

இந்தி மொழிக்கெதிரான கொள்கைகளைக் கொண்டிருக்கும் கட்சிகளை ஒன்று கூட்டியாவது தீர்மானம் நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பி இருந்தாலாவது ஏதாவது பலனேற்பட்டிருக்க முடியும்.

மக்கள் பிரச்சனைகளில் மக்கள் கருத்தையே மதிக்க மறுக்கும் முதலமைச்சர்கள் மாநாட்டால் என்ன பயன்? என்றுதான் நாம கேட்கிறோம்

இந்தித் "திணிப்பிற்கெதிராக எம். ஜி. ஆர். கூறிய யோசனைகளை நாங்கள் விரும்பி வரவேற்கிறோம்" என்று கூறி இருந்தாலாவது நாம் சற்று ஆறுதலடைந்திருப்போம்.

எம் ஜி யாரை எப்படி நம்புவது? அவர் நழுவி விடுவாரே" என்றல்லவா கூறியிருக்கிறார்கள்! "ஒருபுறம் இ. காங்கிரஸை ஆதரிப்பது போலவும், மறுபுறம் ஜனதா ஆட்சிக்கு ஆதரவாக நடந்து கொள்வதைப் போலவும் நடந்து கொள்ளும் எம். ஜீ. ஆரை அண்டை மாநில முதல்வர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்" என்ற உண்மையை நாம் தெரிந்து கொள்ள முடிந்தது இம் முதல்வர்கள் மாநாட்டால்.

தமிழக மக்கள் இரட்டை வேடதாரியை இன்னமும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லையே என்றுதான் வருந்துகிறோம்.

★★
★

என்றும் எங்கள் நினைவில் நிற்கும்



என். வி. என்.

மறைவு: 3-8-1975

இடி அமீனின் இன்னொரு 'கூத்து'!

உலகப் புகழ்பெற்ற அரசியல் கோமாளியும் கொடுங்கோலருமான இடிஅமீன் அண்மையில் ஒரு அறிவிப்புச் செய்துள்ளார். வழக்கம் போலவே வேடிக்கையான அறிவிப்பு

அவர் ஆட்சி செலுத்தும் உகாண்டா நாட்டில் காரோட்டும் பந்தயம் ஒன்று நடக்க இருக்கிறது. நான்கு நாட்கள் நடைபெற இருக்கும் இந்த நீண்டதூரப் பந்தயத்தில் இடி அமீனும் கலந்து கொள்ளப்போகிறார்.

ஆகவே—அந்த நான்கு நாட்களும் ஆட்சிப் பொறுப்பை அவருடைய மூத்த மனைவியான மதினா ஏற்றுக் கொள்வாராம்.

அதிபரின் மனைவிக்கு ஆட்சி நடத்த தெரியுமா என்றும் யாரும் கேள்வி எழுப்பவில்லை, அப்படி யாராவது கேள்வி எழுப்பினால் அவருடைய தலை தப்பாது என்பதுதான் ஊர் அறிந்த உண்மையாயிற்றே!

வந்த மடல்

நடிகர் கட்சி பெற்ற நிதியின் மர்மம்!

★

ஐயா,

கோவை மாவட்டத்திற்கு கலைஞர் அவர்கள் வந்திருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், அனுதாபிகள், அனைவரும் இரவென்றும் பகலென்றும் பாராது பம்பரம்போல் சுழன்று சுழன்று — கழக வளர்ச்சி நிதிக்காகக் கோவை சிதம்பரம் பூங்காவில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் மூன்றரை லட்ச ரூபாய் அளித்தனர்.

அடுத்த வாரமே—

சத்தியா புத்திரர் எம். ஜி ஆர். கோவை வந்து 'கட்சி நிதி' என்று சொல்லி ஒன்பதரை இலட்ச ரூபாய் பெற்றுச் சென்றுள்ளார்! இப்பெருந் தொகையைப் பெறுவதற்கு அமைச்சர் பட்டாளமே அவருடன் பவனி வந்தது

அப்போது—

அமைச்சர்களையெல்லாம் வரவேற்று 'உபச்சாரம்' செய்தவர்கள் யார் தெரியுமா?

அ. தி. மு. க. தொண்டர்களோ அனுதாபிகளோ அல்ல—பெரிய பெரிய செல்வந்தர்களும், ஆலை முதலாளிகளும்தான் அவர்களுக்கு 'விழா' எடுத்து மகிழ்ந்தனர்!

கட்சி நிதிக்கென்று எம். ஜி. ஆர். பெற்றுச் சென்ற ஒன்பதரை இலட்சம் ரூபாயை வழங்கியது யார்?

தி மு. க. தொண்டர்களைப் போல், அ. தி. மு. க. தொண்டர்கள் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று வழங்கினார்களா? இல்லவே இல்லை!

பொதுக் கூட்ட மேடையிலேயே கத்தை கத்தையாக 'பெட்டியிலே' வைத்துக் கொடுக்கப்பட்ட இப்பெருந் தொகையை அ. தி. மு. க.வினர் தெருத் தெருவாகச் சென்று 'வசூல்' செய்தா கொண்டு வந்தார்கள்?

நிச்சயம் இல்லை!

இந்த ஒன்பதரை இலட்சம் ரூபாய் 'வசூல் செய்யப்பட்டதல்ல' என்று கோவையில் வாழும் எவரைக் கேட்டாலும் ஆணித்தரமாகக் கூறுவர்.

அ. தி. மு. க.வின் 'தனிப் பெரும்' தலைவரின் இந்த மோசடியைக் கண்டு வெறுப்படைந்திருக்கும் மக்கள் கோவை நகராட்சித் தேர்தலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்—ஊழல் பேர்வழிகளான அ. தி. மு. க.வினருக்கு மரண அடி கொடுக்க!

க. நடராசன்,
பீளமேடு, கோவை—4.

குமுதக் குருடர்களுக்கு ஒருகேள்வி!

கடந்த 30--9--76 அன்று வெளிவந்த 'குமுதம்' என்ற வார இதழில் சித்தரிக்கப்பட்ட கருத்துப்படமொன்றில்; கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடன், அன்று கழகப் பொதுச் செயலாளராகவும் அமைச்சராகவும்-இருந்து தற்போது அ. தி மு. க. அவைத் தலைவரென அறிவிக்கப்பட்ட நாவலர் அவர்களும், தாங்கள் பேராபத்தில் சிக்குக்கொண்டதால். அதினின்றும் தப்பித்து ஒளிந்து கொள்ள வசதியான கோணிப் பை ஒன்றைக் கடைக்காரரிடம் மிகவும் அவசரமாகக் கேட்பதாக அமைந்திருந்தது.

அந்தக் கருத்துப் படத்தைத் தன்னடக்கமின்றி, தான் தோன்றித் தனமாக வெளியிட்டு அன்று மகிழ்ந்த குமுத ஏட்டாளர்கள் தற்போதுயார் யார் கோணிப் பைகளைப் பெற்றுக் கொண்டு அவர்களது கருத்திற்கிணங்க. அக்கோணிப் பைகளில் வசதியாக ஒளிந்து கொண்டுள்ளனர் என்பதை அறிந்து கொண்டனரா? அறிந்து கொண்டோராயின் அதுபற்றிய கருத்துப் படங்களை வெளியிட எண்ணியதுண்டா? கோணிப் பைகளைத் தந்து அவர்களை யார் யார் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதனையாவது புரிந்து கொண்டதுண்டா? அல்லது அந் வெளியிட்ட கருத்துப் படத்திற்குப் பொருந்தியபடி இன்று நிகழ்பவர்களையாவது கூற முடியுமா?

திராவிடத் தலைவன் புகழ் பெற்றுத் திகழ்வதும் அந்தத் தானைத் தலைவன் பின் இலட்சோப லட்ச தமிழ் இன உணர்வுள்ள மக்கள் அணிதிரண்டு அத் தலைவனின் சுட்டுவிரல் ஆணைக்கெதிர் பார்த்து நின்கின்ற காட்சியினையும் காணப் பொறுக்காத அந்த ஏடு. கலைஞர் அவர்கள் திராவிடத்தின் ஒரே காவலன் என்ற ஒரே காரணத்தாலேயே அன்றுதொட்டு இன்றுவரை அவரைப் புன்மொழிகளால் வசைபாடியே தனது உள்ளக் கிடக்கையை வெளியிட்டு வந்து கொண்டுள்ளது. அதுவே அதன் குறிக்கோளாக இருந்து வருவது நாடறிந்த ஒன்றாகிவிட்டது

'இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார் சிறந்தமைந்த சீரார் செறின்'

என்ற வள்ளுவன் வாய் மொழிக் கொப்பத் தாங்கள் (குமுதம்) எத்துணை பெரிய அதிகார வர்க்கத்தைச் சார்ந்திருந்தாலும், அளவு கடந்த சார்புகள் உடையராயினும் தமிழ்உலகில் நிகரிலாப் பெருமைபெற்ற கலைஞர்என்ற அந்த நல்லறிஞர் வெகுண்டால் அவர்கள் தப்பிப் பிழைக்க இயலாதென்பதைக் குமுதமும் அவர்களுடைய சார்புகளும் உணராது போகலாம்.

ஆனால் 10--6--76 தேதியிட்ட 'குமுதம்' [பக்கம் எண் 73 ல்] ஒரு மூலையில் உள்ள ஸ்மாஞ்-மிர்ரர் குறிப்பினையாவது மீண்டுமொரு முறை படித்துணர்ந்தால் கலைஞரின் சிறப்பை அவர்கள் புரிந்துகொள்ள முடியும். கலைஞர் தமது கொள்கை மீது கொண்ட உறுதியும் பற்றும் அறியப்படும் அந்த ஏட்டாரின் நினைவுக்கு அக்கருத்தினை இவண் குறிப்பிடுவது நன்றெனத் தோன்றுகிறது

"தங்களுடைய கொள்கைகளை விட வசதிகளை மதிப்பவர்கள் விரைவில் இரண்டையும் இழந்து விடுவர்"

மேற்கண்ட அம் மேற்கோளுக்கிணங்க. அன்று வசதிகளை மதித்து. திராவிட இயக்கக்கொள்கைகளைத் துறந்தவர்கள் எந்த நிலையில் தற்போது தாங்கள் புகுந்த இடங்களில் உள்ளார்கள் என்பதை அரசியல் உலகில் அறியாதார் உளரா?

அமரகத்து ஆற்றலுக்கும் கல்லாமா அன்னார் தமரின் தனிமைத் தலை'

என்ற பொய்யா மொழிப் புலவரின் பொன் மொழிக்கிணங்க. போர் வந்த போது களத்தில்

—தள்ளிவிட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போன்றவரின் உறவைவிட. ஒரு நட்புமின்றி தனித்திருத்தலே சிறந்தது என்பது போல இன்று கலைஞரும், பேராசிரியரும் தங்களை நம்பிய தமிழ் மக்களைக் காத்து வருகின்றனர்.

வசதிகளை மட்டுமே நம்பியிருக்கின்றவர்களின் நிலைபையெல்லாம் கொள்கைக்காகத் தங்களுக்கேற்பட்ட சொல்லொணாத் துன்பங்களையும் பொருட்படுத்தாது. தமது குடும்பத்தினருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டு மனம் தளராது தன்னில தடுமாறுமல் விடாமல் வந்த இடுக்கண்னைக் கொண்டு ஓடாமம் கொள்கைச் சுடரேந்தி ஒளி வீசிடும் கலைஞரையும் பேராசிரியரையும் கொண்டு ஒப்பிட்டு உணர்ந்து கொண்டதுண்டா?

அல்லது மேற்கண்ட வசதிகளை நம்பிபலரும், தாங்களை கண்மூடித்தனமாக எதிர்த்து வருகின்ற திராவிட இயக்கப் பாசறையினின்றும் வெளியேறி விட்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் பழைய கருத்துக்களைக் குமுதம் மறந்து போய் விட்டதா? புனிதரின் காலடியில் வீழ்ந்ததால் அனைவரும் புனிதமாகி விட்டதாகக் கருதுகிறது போலும்.

23—9—76 அன்று மற்றொரு கருத்துப் படத்தை குமுதம் ஏடு வெளியிட்டுத் தனது காழ்ப்பை வெளிப்படுத்திபிருந்தது 'உலகில் அரசியலில் எல்லாக் கட்சிகளும் மக்களுக்கு ஒன்றுமே விளக்காமல் வாக்குகளைப் பெற்றுத் தங்களிடம் உள்ள அலாவுதீன் அற்புத விளக்கின் பயனால் சாதனைகளை ஒருவருக்கும் தெரிவிக்காமல் எவரும் அறியா வண்ணம்

இரா ஜெயபால்

சாதித்து வருவது போலவும். கலைஞரும், அவரது வழி நடக்கும் கழகமும். மக்களிடம் கவர்ச்சிப் பேச்சு மூலமாகவும் தமிழக மக்களை ஏமாற்றியதால் தமிழக மக்கள் 76 ஆம் ஆண்டுக்கு முன்பு ஏமாந்து போனது போலவும் கருத்துப் படம் வெளியிட்ட குமுதம், இனி ஏமாறக் கூடாது என்பதாக மக்கள் (கோழிகள்) உணருவது போலக் குறிப்பிட்டிருந்தது.

கவர்ச்சிப் பேச்சு என்ன என்பதை குமுதம் அறியுமா? விவசாயப் பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம், விவசாய மக்களுக்கு போனஸ், மாநில அரசு தன் மக்களுக்கு அஞ்சல் அலுவலகங்களின் மூலம் கடன் வழங்குதல், தொண்டர்களை அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பது என்ற தேர்தல் கால மேடைச் சரக்கு என்னரகம் என்று கூற முடியுமா?

ஊழல் நடந்தது என்றே கூறி அரசியல் வாழ்வைத் துவக்கி வாழ்பவர்கள், கண்ணொளித் திட்டம், தொழு நோய்ப் பிச்சைக்காரர் மறு வாழ்வுத் திட்டம், குடிசை மாற்றுத் திட்டம்; ஊனமுற்றோர் நல் வாழ்வுத் திட்டம் போன்ற சீரிய திட்டங்களால் மக்கள் பலன் பெறவேயில்லை என்று உறுதியாக மறுத்துக் கூற முடியுமா? அதைக் கவர்ச்சிப்பேச்சு தான் என அறுதியிட்டுக் குமுதத்தால் கூற இயலுமா?

இருபது- அம்சத் திட்டமென அறிவித்து. பொழுது விடிந்து வானொலியைத் திருப்பினால் அதையே வானொலியின் முழு நாள் நிகழ்ச்சியாக விளம்பரம் செய்து, தான் சூடிய மகுடம் தன் மகனின் தலைக்கே போய் அமைய வேண்டும் என எண்ணி சுதந்திர தாகத்தைத்தீர்க்க தங்கள் சுற்றம் சுகம் மறந்து வெள்ளையர்களின் வெங்கொடுமைக்கு இலக்காகியும், சலிக்காது போராடிய இந்தியத் துணைக்கண்டத்து முதுபெரும் தலைவர்களையெல்லாம் பாழும் சிறையில் தள்ளி, தனது பாலகனைக் குளிர்வித்த இதயமற்ற இந்திரா எனும் சர்வாதிகாரி. தமிழகத்தில் உள்ள ஒரு சாதாரண மாநகராட்சித் தேர்தல் பிரச்சாரத்திற் கென்று வந்தாரே அது எதற்காக? அது கவர்ச்சியாகக் கருத்துக் குருடர்களுக்குத் தெரியாமல் போய் விட்டதோ?

ஊழலை ஒழிப்பதற்கென்றே இந்த உலகில் தோன்றிய ஒரு பெரும் உத்தமராகத் தன்னை எண்ணிக் கொண்டு. அதைப் பறை சாற்றிக் கொண்டலையும் இந்நாள் தமிழக முதல்வர் இராமச் சந்திரன் அவர்களை ஓடியோடி வாழ்த்தி வால் பிடிக்கும் குமுதம் போன்ற தமிழின விரோதக் கொள்கைகளையுடைய ஏடுகளை அடையாளம் கண்டுகொள்ளுங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகப் பாசறையில் இருந்த நாவலர் பாவலர். ப. உ. ச, இராசாராம், அரங்கண்ணல், இராமச்சந்திரன், சத்தியவாணி முத்து ஆகியோர் ஊழல் சாம்ராஜ்ய மன்னர்கள் என எக்காளமிட்டு வந்தனர். ஆனால் அந்த ஊழல் பேர்வழிகளெல்லாம் தற்போது யாருடைய அரவணைப்பில். எந்தக் கூடாரத்தில் கும்மாளமிட்டுக்கொண்டு வருகின்றனர் என்பதைக் கண்டு கொண்டபின் வாய் மூடிகுமுதம்மவுனமாய் இருப்பதன் நோக்கமென்ன?

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கலாச்சார பாதுகாப்பு இயக்கம், இனப் பாதுகாப்பு இயக்கம்; மொழியுணர்வையூட்டி மானத்துடன் வாழ வைக்கத் துடிக்கும் பண்பியக்கம். இந்த உன்னத லட்சியங்களை ஈடேற்ற அரசியலை ஒரு கருவியாகத்தான் தி. மு க. பயன்படுத்திக் கொள்கிறதே தவிர, அரசியல் அந்த இயக்கத்தின் முழு மூச்சல்ல என்பதை தமிழ்ச் சமுதாயம் உணருகின்றகாலம் தமிழகத்தின் பொற்காலம் என்பதை இந்த குறுகிய எண்ணப் பார்வை கொண்டோர் புரிந்துகொள்வது அவர்கட்கு நன்று.

சபாஷ் வாத்தியார்!

(கற்பனை உரையாடல்)

ஏட் :— வாய்யா! என்ன ஒரே குஷியா வர்றே?

கான்ஸ்—பிள் :— நம்ம முதலமைச்சரு பேச்சைப் பேப்பர்லே பார்த்துட்டு வாறேன். மகிழ்ச்சி தாங்கல!

ஏட் :— ஏதாவது சம்பள உயர்வா?

கான்ஸ் :— அது இல்லேபா புண்யவான் கலைஞரு காலத்திலே எவ்வளவு சலுகை. சம்பளம்..அதெல்லாம் இப்ப கிடைக்குமய்யா ஹூம். கிடைக்கிறது ஒழுங்கா கிடைச்சாப் போதாது!

ஏட் :— அப்டி என்னய்யா ஆயிட்டுது இப்ப?

கான்ஸ் — சைக்கிள்லே டபுள்ஸ் போகலாம்னு சட்டம் வந்ததுல இருந்து நம்ப லஞ்சம் குறைஞ்சு போச்சு.. டபுள்ஸ் போறவனுங்க நம்பளை பார்த்து உய் உய் னுட்டு விசிலடிச்சுட்டு வேற போறுங்க

ஏட் :— நம்ப ஆளுங்களோட பழக்க தோஷமய்யா! விஷயத்திற்கு வாரும்...

கான்ஸ் :— கள்ளச் சாராயம்.......

ஏட் :— அதுதான் இந்த ஆட்சியிலே ஆறாப் ஓடுதே'

கான்ஸ்: இப்ப நமக்கு நாலைஞ்சு கள்ளச் சாராய வியாபாரி கிட்டேயிருந்துதான் மாமூல் வருது.

ஏட் :— ஆமாம்... .. ..

கான்ஸ் :— இனிமே ரொம்பச் சௌகரியம்,

ஏட் :— என்னய்யா! புரியும்படியா சொல்லுமே...

கான்ஸ் :— நம்ம முதலமைச்சரே இப்ப சாராயங் காய்ச்சிறவங்க பட்டியல் போட்டுத் தரப் போறாருல்ல ..... பட்டியல்ல நமக்கும் தெரியாத ஆளுங்க இருப்பாங்க ..

ஏட் :— ஆமா நமக்குத் தெரிஞ்ச ஆளுங்க கிட்ட மட்டும் மாமூல் வாங்கினா போதாது.
"எனக்கு (முதலமைச்சர்) தெரிஞ்சவங்களையும் பட்டியல் போட்டுத் தர்றேன் அவங்களையும் விடாமல் மாமூலை சேர்த்து வாங்கிக்கோன்னு சொல்றாரு போலிருக்கு...

கான்ஸ் — அவங்க கிட்டேயும் மாமூல் வாங்க வழி செய்ற முதலமைச்சருக்கு நம்ம மீது எவ்வளவு கருணை பாருங்க!

ஏட் :— சபாஷ் வாத்தியார் ஆட்சி!

(நல்லா இருக்கய்யா சபாஷ் வாத்தியார் கோஷம்! நீங்க பேசுனதை கேட்டுக் கிட்டுத்தான் இங்கேயே நிக்கிறேனென்று சொல்லிக்கொண்டே சப் இன்ஸ்பெக்டர் நுழைய கான்ஸ்டேபிளும் ஏட்டும் எழுந்து நிற்க பேச்சு நின்று விடுகிறது")

செங்கை செ. தீவான்.

M. K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத் திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணைமுறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

புருஷன்

தென்னரசு

(11)

“பூ’ வயசுப் பொண்ணுலே! ஒங்க மொகரையைப் பாத்தாலே தெரியுதே!’ என்றார் தபேலாக்காரர் பதிலுக்கு.

குருவம்மாவின் மனம் வாணக்கிடங்கில் நெருப்பிட்டதுபோல் பொரிவிட்டுக் கிளம்பியது.

“என்ன சொன்னே?” என்று கூவிக்கொண்டே கையிலிருந்த அகப்பைக் கம்பை ஓங்கிவிட்டாள் குருவம்மா! ரகளை ஆரம்பித்து விட்டது.

“ஏாருடி அவ இங்கே வந்து கதாகாலட்சேபம் நடத்துறவ” — இப்போது புருஷன் குரல் உள்ளே இருந்து இடி இடிப்பது கேட்டது.

குருவம்மா திரும்பிப் பார்த்தாள். பார்த்ததும் அவள் வயிற்றில் நெருப்புப் பிடித்ததுபோல் இருந்தது.

“ஒ கோன்னுனும்! ஏண்டி தட்டுக்கெட்டவளே! கூட்டுக்காரச் சிறுக்கி! இன்னம் இந்த உயிரை வைச்சுக்கிட்டு இருக்கியே; ஒனக்குமானம் ரோஷம் இல்லையா?’ உள்ளே இருந்து வந்த பெரிய கடிகை தனிக் கச்சேரியே வைத்தார். சுற்றி இருந்தவர்கள் திகைத்து நின்றார்கள்.

“ஏட்மா; மதுரவல்லி! இவ யாரு? முன்னாடியே இவளை ஒனக்குத் தெரியுமா?” ஆர்மோனியப் பெட்டிக்காரர் கேட்டார்.

“இவதான் எங்களவருக்கு வாழ்க்கைப்பட்டு அவரைச் சீரழிச்ச மூதேவி!’ மதுரவல்லி சொன்னாள்.

“என்ன! சின்னையிரத்துக்கு வாழ்க்கைப்பட்டவளா? இவ இங்கே எப்படி வந்தா?”

“யாருக்குத் தெரியும்? சீப்பட்ட அந்தக் கழுதையைத்தானே கேளுங்க!’

இந்தக் கலவரம் அறிந்து விழாக்குழுத்தலைவர் ஓடிவந்தார். குருவம்மாவும் சத்தவுட்டோவென்று கதறித் தரையில் விழுந்து புரண்டுபுரண்டு அழுதாள். குழுத்தலைவர் ஒன்றும் புரியாமல் விழித்தார். நாடகக்காரி, விழாக்குழுத் தலைவரைத் தனியாக அழைத்துப்போய் குருவம்மாவைப் பற்றி பொய்யும் புரட்டுமாக அளந்து தள்ளினாள். தலைவருக்கு மனம் குழம்பியது. இல்லாவிட்டால் அவர் வெளியில் வரும்போது ‘குருவம்மா! இவ்வளவு காலமாக எங்களிடத்திலே நீ ஒன்னுகூடச் சொல்லாமெ மறைச்சுக்கிட்டே வந்திட்டியே?” என்று கேட்டிருப்பாரா?

குருவம்மா அதற்கு ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவள் அவளது தாயை நினைந்து —

கையைத் தொட்டவரை
காலமெல்லாம புகழ்ந்த
தாயே!

மெய்யைத் தொட்டவரை
பொழுதெல்லாம் நினைத்த
தாயே!

துயரம் முகம் காட்டாமல்
தூக்கிவளர்த்த தாயே — இப்ப
உன் முகத்தை மூடிக்கிட்டு
என் மனத்தைக் கலங்க
விட்டாயே!

அப்பா இருந்தமட்டும்
அல்லி போல் வாழ்ந்து
வந்தேனே!

கப்பல் கவிழ்ந்ததுபோல-அக்
கண் அரிபவான் காலமானா
னோரும் உற்றதும்
ஊசிப்போனபண்டத்தைப்
போல — வீசி எறிந்துதான்னே
வீதியெல்லாம் துரத்துறாங்க!

— என்று இப்படி இசை கூட்டிப் புலம்பினாள் அவளது சோகக்குரல் குருட்டுப் பூனையைப்போல பல மூலைகளில் முட்டிமோதி அப்படியே திரும்பி வருவதுபோல் அவளுக்குப்பட்டது.

நாடகம் தொடங்கி விட்டது. அன்றைய நாடகம் ‘கந்தனின் காதல் மணம்!’

வள்ளி தினைப்புலம் காக்கும் கட்டம் முடிந்து நம்பிராஜன் மேடைக்கு வந்து பாடத் தொடங்கினான். அப்போது கூட்டத்தில் ஒருவன் எழுந்தான்.

“இது என்ன கச்சேரிக் கொட்டகையா?” ஸ்திரீ பார்ட்டை வரச் சொல்லலையா?” என்று கூச்சல் போட்டான்.

இன்னொருவன்,

“ஒன்ஸ்மோர், ஒன்ஸ்மோர்!!” என்று கத்திக் குழப்பத்திற்கு அச்சாரம் வாங்கிவிட்டான் அவ்வளவுதான் கூட்டம் குழந்தையைப்போல மிரண்டது. அந்த நேரத்தில் ‘குபீர்’ என்று மின்னல் தெரிந்தது கூட்டம் ஒளிவந்த அந்தப் பக்கமாகத் திரும்பியது.

“தீ-தீ! டீக்கடையில் தீ!” என்று கதறிக் கொண்டு, கலவரமடைந்த பறவைக் கூட்டத்தைப்போல் கூட்டம் சிதறி ஓடியது. தீ வேறு எங்குமல்ல, சக்குபாய் டீஸ்டால்தான் சுழன்று சுழன்று எரிந்து கொண்டிருந்தது.

“ஐயோ! சக்கு வெளியே ஓடியா! ஓடியா!” என்று குருவம்மா அலறினாள். நாடகக் கொட்டகைப் பக்கமாக இருந்து ஓடிவந்த பொன்னையா வாளியில் தண்ணீரை மொண்டு கூரையில் அடித்தான். எவ்வளவுதான் அடிப்பது! அவன் கை சோர்ந்து விட்டது.

“குருவம்மா, நடந்தது நடந்துவிட்டது. இனி புலம்பிப் பயனில்லே! எரியட்டும்! அடியோடு எரிந்து அணையட்டும்! — எவனோ பேடிப் பயல் செஞ்ச வேலை இது! அகப்பட்டா அவன் நெஞ்சைப் பொளந்திடுவேன்’ என்று பொன்னையா கர்ஜித்தான்.

மயக்கமுற்ற புறாவைப்போல் குன்றிப் போயிருந்த குருவம்மா திடீரென்று எழுந்து எரியும் கடைக்குள் ஓடினாள்.

“குருவம்மா! ஒனக்குக் கிறுக்குப் பிடிச்சுப் போச்சா? கடை எரியட்டும்! நீ ஏன் அங்கே போறே?” என்று அவளது கையைப்பிடித்து இழுத்து நிறுத்தினான் அவள் தற்கொலை தான் செய்து கொள்ளப் போகிறாள் என்று அவன் நினைத்தான்.

“அண்ணே உள்ளே உண்டியல் பெட்டி இருக்குது மறந்திட்டேனே சக்குவின் கல்யாணத்துக்காகச் சேர்த்ததெல்லாம் அதிலே நானே அண்ணே வச்சிருக்கேன்” என்று கையை விடுவித்துக் கொண்டு குருவம்மா கடைக்குள் ஓடினாள் அவள் உள்ளே போய்த் திரும்புவதற்குள் வாசல் பகுதி எரிந்து சரிந்து விட்டது. குருவம்மா திரும்புவதற்குப் பாதையில்லை.

உள்ளே இருந்து கொண்டு குருவம்மா கத்தினாள்; துடித்தான் பொன்னையா புலிபோல் நெருப்புக்குள் பாய்ந்தான் அப்போதுதான் குருவம்மாவை நெருப்பு பற்றத் தொடங்கியிருந்தது அவள் நெருப்பிலேயே கிடந்து அணுஅணுவாகப் போராடிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் உண்டியல் பெட்டி கிடந்தது. அவள் முகமெல்லாம் தீச்சுட்ட புண்கள்! அருகில் நின்ற பொன்னையா பொலபொலவென்று கண்ணீரைக் கொட்டிக் கொண்டே சக்குவை குருவம்மாவிடம் கொண்டு வந்து நிறுத்தி.

“குருவம்மா சக்குவைப் பாரு குருவம்மா!” என்று சின்னக் குழந்தையைப் போல் கத்தினான்,

அந்த நேரத்தில் அணைக்கட்டுப் பக்கமாக பெரும் இரைச்சல் கேட்டது. அந்த இரைச்சல் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிக் கொண்டே வந்தது. ஒரு சிறுவன் ஓடிவந்து “புடிச்சாச்சு புடிச்சாச்சு! தீ வெச்சவனைப் புடிச்சாச்சு’ என்று குதூகலிக்கச் சொன்னான். கூடி இருந்தவர்களின் கவனம் அந்தத் திசைக்குத் திரும்பியது.

கையில் கடிகாரம், கழுத்தில் மைனர் சங்கிலி, விரல்களில் மோதிரங்கள், வாயல் வேட்டி, சில்க் சட்டை–இத்தனையும் அணிந்த ஒரு புள்ளியைத் தொழிலாளர்கள் இழுத்து வந்தார்கள்.

“அட சின்னையிரம்! இவரு நம்ப ஸ்திரீ பார்ட் பொண்ணுக்கு அப்பாவாச்சே. என்ன சங்கதி முந்திக்கிச்சு!” என்றார் அங்கு வந்த வரவேற்புக் குழுத் தலைவர். குருவம்மா ஒரு பெருமூச்சு விட்டு சின்னையிரத்தைப் பார்த்தாள் உடனே கண்களை மூடிக்கொண்டாள். அதற்குள்ளாக செய்தி பரவிவிட்டது ‘குருவம்மா புருஷன்தான் நெருப்பு வச்சதாம் முதல் புருஷனைக் கண்டதும் அவ கண்ணை மூடிக்கிட்டானே!’ “எல்லாரும் இப்படிப் பேசிக் கொண்டார்கள் இது பொன்னையாவுக்கும் எட்டியது ஆனால் அவன் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவே இல்லை.

இப்போது அந்த இடத்திற்குப் போலீசார் விரைந்து வந்து சின்னையிரத்தைக் கைது செய்து கடைக்குத் தீ வைத்ததாகவும், குருவம்மாவையும் அவள் மகளையும் கொலை செய்ய எண்ணங் கொண்டிருந்ததாகவும் அவன் மீது மதுரை நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார்கள்.

‘கொடியவன் வஞ்சகன்! இரக்கமில்லாதவன் அவனைத் தூக்கு மேடைக்கு அனுப்பத்தான் வேண்டும். தைரியமாக இரு! கோர்ட்டில் நடுங்காதே!” என்று குருவம்மாவுக்குத் தைரியம் சொல்லி அவளை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தான் பொன்னையா.

குருவம்மாவைக் கூண்டில் ஏற்றினார்கள். வக்கீல்கள் அவளைத் திருப்பித்திருப்பிக் கேட்டார்கள் அவள் சொன்ன பதில் அந்த ஒரே பதில்தான்.

“யாரும் என் கடைக்குத் தீ வைக்கவுமில்லே. என்னைக் கொல்ல முயற்சிக்கவுமில்லே அடுப்பில் கிடந்த நெருப்புப் புகைந்து தானகப் பற்றிக் கொண்டது’

— குருவம்மாவின் இந்தப் பதிலைக்கேட்டு அனைவருக்கும் பேயறைந்தது போலாகி விட்டது.

பொன்னையா கண் முடித்திறப்பதற்குள் அந்த இடத்தைவிட்டு மறைந்து விட்டான். பிறகு அவன் திரும்பவே இல்லை.

“அம்மா!”

— இத்தனை காலமும் குருவம்மாவைக் குறைத்துப் பேசியதற்காக மன்னிப்புக் கோரும் தோரணையில் அலறினாள்.

“இடிஞ்சு போன வீட்டிலே எருக்கு முளைச்சாஎன்ன, ஊமத்தை முளைச்சா என்ன’; எல்லாம் ஒன்னைப் புடுச்ச சனியன் கொலைபிறக்குத்தான்’ என்றாள் குருவம்மா எப்போதும் போல.

முடிவுரை:

இவ்வளவுதான் குருவம்மாவின் கதை.

‘ஆணின் இச்சை வெறியில் பிறந்து தீயொழுக்கத்தில் வளர்ந்து துன்பத்திலும் தோல்வியிலும் முடிவடைகிறது; ஆனால் பெண்ணின் இச்சையோ அன்பில் பிறந்து தியாகத்திலும் பொறுமையிலும் வளர்ந்து களிப்பிலும் வெற்றியிலும் முடிவடைகிறது’ என்பதற்கு குருவம்மாவின் வரலாற்றை ஒரு சோற்றின் பதமாகக் காட்டினேன்.

வணக்கம்

★★★★★★★★-★★★★

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★★★★★★-★★★★★

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!

மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினால், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர்: சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு. (சந்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கிடைக்கும் விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
“போட்டோ வீனஸ்” 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
PHOTOGRAPHERS (ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

தொடர் கதை

கருணாநிதி

(1)

(சங்கு, சந்தனம் என்ற இரண்டு கைதிகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)

சங்கு: என்ன சந்தனம் அண்ணே. சந்தோசம்தான் உனக்கு. நாளைக்கு விடுதலையாகப்போறே! உம்—அச்சடிச்ச சோறும் அவுன்ஸ் குழம்பும் வேப்ப மரத்துக் காத்தும், வேர்க்கடலைஉருண்டையும் இன்னையோட சரி—இல்லையா?

சந்தனம்: ஆமாம் சங்கு—உங்களையெல்லாம் பிரியவேண்டுமென்று எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. ஏறத்தாழ எட்டு வருடமாக ஜெயிலுக்குள்ளேயே சிநேகிதர்களாக வாழ்ந்துவிட்டோம். சங்கு! நம்முடைய நட்பையெல்லாம் மறந்துவிடாதேயப்பா!

சங்கு: எப்படி மறக்க முடியுமண்ணே நீ தினம் தினம் சொல்லுவாயே, அந்தக்கதைகளை மறக்கமுடியுமா? பழைய காலத்துப் பாட்டுக்களைப் பாடிக்காட்டி அர்த்தம் சொல்லுவியே, அதைத்தான் மறக்க முடியுமா? உனக்குக் கிடைக்கிற எந்தப் பண்டத்திலேயும் எனக்குப் பாதி கொடுப்பியே அதைத்தான் மறக்க முடியுமா? படிச்சவங்களோட சிநேகிதம் கிடைக்கிறகூட பெரிசு இல்லேண்ணே படிச்ச புத்திசாலிகளோட சிநேகிதம் கிடைக்கிறது பெரிய பாக்யம் அண்ணே—அந்த வகையிலே நான்பாக்யசாலிதான்.

சந்தனம்: நல்ல தோழனாக நீ இருந்தாய்—இனி இந்தப் பொல்லாத உலகத்திலே நான் யாரோடுபோய் நட்பு கொள்ளப் போகிறேன்.

சங்கு: ஒருத்தன் சிநேகிதமும் உனக்கு வேண்டாமண்ணே! நீயுண்டு; உன் குடும்பமுண்டு என்று வாழ்க்கையை குஷியா நடத்துண்ணே போய்

சந்தனம்: குடும்பம்! எனக்கு யார் இருக்கிறார்கள் குடும்பம் நடத்த—??

சங்கு: ஏன் அண்ணே கண் கலங்குறே! குடும்பத்தைப் பத்தி பேச்சு எடுத்தா எப்போதுமே நீ இப்படிதான் ஆயிடுறே! நானும் இந்த எட்டு வருசமாத்தான் உன்னைக் கேட்கிறேன்—என்ன விஷயம்னு? உன் கதையைச் சொலல மாட்டேங்கிறே! அண்ணே—இப்பகூட உன் கதையைச் சொல்லக்கூடாதா வேண்டாம் வேண்டாம்—இதுக்காக அழாதே அண்ணே! இன்னைக்கு ஒரு நாளு; சந்தோஷமா இருந்துட்டு வெளியே போண்ணே!

சந்தனம்: சங்கு! என் கதையை இன்று சொல்லத்தான்போகிறேன். இதயத்திலிருந்து சுமையை இறக்கத்தான் போகிறேன். உன்னைவிட நல்ல நண்பன் யாரப்பா எனக்கு இருக்கிறார்கள்?—உன்னிடம் சொல்லாமல் யாரிடம் என் சோகக் கதையை சொல்லப் போகிறேன்.

சங்கு: அண்ணே—ரொம்ப வேதனையாயிருக்கும்னு சொல்ல வேண்டாம்.

சந்தனம்: என்னப்பா வேதனை? தூக்குக்குப்போகும் கைதிகளை துடிக்கத் துடிக்க இழுத்துப்போகிற காட்சியை இந்தச் சிறைக்குள்ளே எத்தனையோ முறை பார்த்திருக்கிறோமே அதைவிடக் கொஞ்சம் அதிக வேதனையானது என் கதை; அவ்வளவுதான்... சொல்கிறேன் கேள். என் முகம் இவ்வளவு விகாரமாக இருப்பது ஏன் தெரியுமா? சதை கிழிந்து கிழிந்து தொங்குவதற்கு காரணம் புரியுமா? பிறக்கும்போதே நான் இப்படிப் பிறந்திருப்பேன் என்று நீ கருதுகிறாய்? என் அம்மா "மாம்பழமேனி என் மகனுக்கு". என்று வர்ணிப்பார்களாம். உற்றார் உறவினர் எல்லாம் "ஆடுதன் ராஜா போல இருக்கிறான், ஆண்சிங்கம்!" என்று பாராட்டுவார்களாம். ஏன்—அவள்கூட என் அழகுக்கு ஆசைப்பட்டுதான் என்னைக் காதலித்தாள்.

சங்கு: ஓ! காதலி வேறெ இருக்கிறதா?

சந்தனம்: இருந்தாள் ஒருகாலத்தில்! இப்போது இல்லை. இனி மேலும் இல்லை.

சங்கு: செத்துவிட்டதா அண்ணே!

சந்தனம்: என்னைப் பொறுத்த வரையில் அப்படித்தான்——

சங்கு: ஏன்?

சந்தனம்: அழகுக்காக என்னைக் காதலித்தாள்—நான் அலங்கோலமானதும் என்னை வெறுத்துவிட்டாள்.....

சங்கு: என்னது?

சந்தனம்: ஆச்சரியப்படாதே சங்கு...பெண்களே அப்படித்தான்...

சங்கு: எல்லாப் பெண்களும் அப்படியிருக்கமாட்டாங்க அண்ணே

சந்தனம்: தவறான கணக்குப் போடுகிறாய்—அதற்குக் காரணம்—உனக்கு கல்யாணமாகவில்லை...சங்கு!

சங்கு: எனக்குத்தான் கல்யாணம் ஆயிட்டுதுன்னு சொல்லியிருக்கேனே——

சந்தனம்: அப்படியானால் உன் முகத்தில் யாரும் திராவகம் ஊற்றவில்லை... அதனால்தான் பெண்களைப் பற்றி உனக்குத் தெரியவில்லை.

சங்கு: அய்யோ—உன் முகத்தில் திராவகமா ஊற்றினாங்க!

சந்தனம்: ஆமாம் சங்கு ஆமாம்! நான் அழகாயிருந்தது பிடிக்காமல் அல்ல; என் அழகில் மயங்கிவிட்டாளாம் அவள்—அதைத்தடுப்பதற்காக என்னை சித்திரவதை செய்துவிட்டார்கள்.

சங்கு: கொஞ்சம் விபரமாகச் சொல்லண்ணே உன் கதையை...

சந்தனம்: சொல்லுகிறேன்—குறுக்கே கொஞ்சம் பேசாமலிரு! குமுதம் என்னுடைய படித்தவள். குபேரன் வீட்டுக் கோதை. நானோ குடிசை வாழ்ந்தவன் மகன். இறந்துபோன என் அப்பாவின் எண்ணத்தை எப்படியும் பூர்த்தி செய்ய எண்ணி, என் தாய் என்னை படிக்கவைத்தார்கள்; படித்தேன். குமுதமும் நானும்... சரி, கதையை வளர்த்துவானேன்! காதலர்களாகிவிட்டோம். வலியோன் மகளை எளியோன் காதலித்தேன் என்பதைத்தவிர எங்கள்காதலில் வேறெந்தக் குற்றமும் யாரும் சொல்ல முடியாமல்தான் இருந்தது. வழக்கம் போல் எங்களின் திருமணத் திட்டம்முறியடிக்கப்பட்டது. வயதான என்தாயும் வாழ்க்கையை முடித்துக்கொண்டார்கள்—குமுதமோ ஒரு நாள் இரவு என் குடிசைக்கு ஓடிவந்து "கொத்தடிமையாகிவிட்டேன் உங்களுக்கு—குடும்பம் நடத்துவோம் வாருங்கள்" என அழைத்தாள். "எதிர்ப்பு மலையாகுமே குமுதம்!" என எச்சரித்தேன். 'மலையைப் பிளக்கும்சிற்றுளி நம் காதல்' என்றாள்—மறுக்க முடியுமா என்னால்! அன்றிரவே பயணமானோம். அயலூரிலே எங்கள் குடும்பம் ஆரம்பமானது ஆனந்தமான அந்த வாழ்க்கையை நினைத்து இப்போது அழுவானேன்! எங்களுக்கு ஒரு செல்வமும் தோன்றினான்.

சங்கு: பிள்ளையிருக்கானா அண்ணே உனக்கு?

சந்தனம்: இருக்கிறான்—கேள் பாக்கியை!... குழந்தையுடன் குதுகலமாய் நடைபோட்டோம் வாழ்வுப்பாதையில்! குமுதாவின் அண்ணன் மலேயா போயிருந்தான் சம்பாதிக்க—அவன் திரும்பி வந்துவிட்டான். வீட்டார் விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள்-அவன் ஒரு பர்மாக்காரியைப் பாரியாளாக அழைத்துவந்தவன் அவனுக்கு குமுதா மீது கொள்ளை ஆத்திரம்பிறந்துவிட்டது ஆகவே எதிர்க்கப்புறப்பட்டான் ஆள் முரடன். சண்டைபோட்டு சமாளிப்பது கொஞ்சம் கஷ்டம்தான் குமுதாவை அடிமையாக்கினது என் அழகுதான் என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள் அவனிடம்—ஏன், குமுதாவே அடிக்கடி அதைச் சொல்லிக்கொண்டிருப்பாள். அந்த அழகையே குலைத்துவிடுகிறேன் என்று அவள் அண்ணன் அக்கினித் திராவகத்துடன் புறப்பட்டுவிட்டான். வீட்டிலே தூங்கிக்கொண்டிருந்தேன். அவன் வந்துவிட்டான் விழித்துக்கொண்டேன். திராவகத்தை என் அழகான முகத்திலே வீசிவிட்டான் அய்யோ—அந்த எரிச்சலை இப்போது நினைத்தாலும் பயமாயிருக்கிறது. பொறாமைக்காரர்களின் வயிற்றெரிச்சலையும் மிஞ்சக்கூடிய எரிச்சல் அது! திராவகம் ஊற்றப்பட்ட இடத்தைக் கையால்தொடாமலிருப்பது கொஞ்சம் நல்லதாம—அவசரத்தில் அந்த யோசனையெல்லாமா வருகிறது? முகத்தைத் துடைத்துக்கொண்டேன் கையால்; அப்போது கிழிந்ததுதான் இந்தச் சதையெல்லாம்—குமுதாவின் அண்ணன் ஓடினான், நான் துரத்திப் பார்த்தேன் முடியவில்லை—தெருவில் விழுந்துவிட்டேன். குமுதாவும் குழந்தையும் அப்போது வீட்டில் இல்லை பையனைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் விடுவதற்காகப் போயிருந்தாள். உடனடியாக யாரோ தெருவிலுள்ளோர் வைத்தியசாலையில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். குமுதாவும், குழந்தை செல்வனும வைத்தியசாலைக்கு ஓடிவந்து அலறினார்கள். குமுதா என் முகத்தின் கோரத்தைக்கண்டு அலறிவிட்டாள். முதலில் நான் சோகத்தின் உச்சத்தில் அலறுகிறாள் என்றுதான் நினைத்தேன். பிறகுதான் நான் யூகித்துக்கொண்டேன்—அவளுக்குத் தேவையான அழகு முகம் போய்விட்டதே என அலறியிருக்கிறாள் என்று. மறுநாள்வைத்தியசாலையில் இருந்தபடியே கேள்விப்பட்டேன்; குமுதா எங்கேயோ போய்விட்டாள் என்று. குழந்தை செல்வன் மாத்திரம் தெருவினரால் பராமரிக்கப்பட்டான். குமுதாவின் அண்ணன் மீது வழக்கு நடைபெற்றது. நானும் சிகிச்சைபெற்று இந்த அலங்கோலமானமுகத்துடன்—வெளியேவந்தேன். ஐந்து வருடத்திற்கு கிட்டத்தட்ட வழக்கு நடைபெற்று கடைசியில் குமுதாவின் அண்ணன் விடுதலை பெற்றான். குற்றவாளியல்ல என்று தீர்ப்புக் கூறப்பட்டுவிட்டது. என்னால் தாங்க முடியவில்லை பொறுக்கமுடியாத ஆத்திரத்தால் துடித்தேன் அவசரப்பட்டு ஏதாவது செய்துவிட்டால். குழந்தை செல்வன் நாதியற்றுப்போய்விடுவானே என்று யோசித்தேன் கடைசியாக சிலரது சிபாரிசுபிடித்து, செல்வனை வெளியூரில் ஒரு பள்ளிக்கூட தர்ம உணவு விடுதியில் சேர்த்துவிட்டு ஒரு பெருமூச்சை விட்டேன். அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்துகுமுதாவின் அண்ணனைப் பழிவாங்கும் மூச்சும் பிறந்தது குமுதா என்விகார ரூபத்தைச் சகிக்காமல் எங்கேயோ போய்விட்டாள்—குமுதா என் இதயத்தைக் காதலிக்கவில்லை. லட்சணத்தைத்தான் காதலித்தாள் என்று பேருண்மையை அவள் அண்ணன் வீசிய அக்கினித் திராவகம் எனக்கு உணர்த்தியது என்றாலும்கூட; போகும் பாதை மோசம் என்பதை எச்சரிக்கும் தோரணையில் முள் குத்துகிறது என்பதற்காக அந்த முள்ளை எடுத்து முத்தமிட முடியுமா? அதை ஒடித்து முறித்து தூரத்தில் வீசித்தானே எறிகிறோம்; அதுபோலவே என் முகத்தைப் பாழ்படுத்தி காதல்பாதை மோசம் என்று உணர்த்திய மூர்க்கனை விட்டுவைக்க மனமில்லை. என் அருமைச்செல்வனுக்கு அறிவுரைகள் புகன்றேன்—"எந்த தவறுவேண்டுமானாலும்செய்! ஒருபெண்ணை மட்டும் காதலிக்காதே!"

வின் அண்ணனைத் தாக்கி வேதனை கொடுத்திருந்தாலும் கூட, நான் நேரிடையாக வஞ்சம் தீர்த்துக்கொள்ளவே மிகவும் துடித்தேன். அவர்கள் பக்கம் வேகமாக வந்தேன். பர்மாக்காரி பலமாக இருமிக்கொண்டிருந்தாள். கையிலிருந்த கத்தியை குமுதாவின்சகோதரனுடைய நெஞ்சில்—ஆம் என்னை அலங்கோலபடுத்திய அந்தப் பாவியினுடைய இருதயத்திற்கு நேராகசெலுத்தினேன்—அங்கேயே பிணமானான். அதனுடைய விளைவுதான் சங்கு இத்தனை ஆண்டுசிறைவாசம்! அவன் என்னைக் கொல்லாமல் கொன்று விடுதலை பெற்றான்—நான் அவனை ஒரேயடியாக கொன்று தண்டனை பெற்றேன்.

சங்கு: என்னால்உன் கதையைத் தாங்கமுடியவில்லை அண்ணே! போகட்டும் நாளைக்கு வெளியிலே போய் மகனையாவது சுகமாகக் காப்பாத்து அண்ணே!

சந்தனம்: என் செல்வனுக்காகத்தானே நான் வாழ்ந்துகொண்டிருப்பதே—ஆனால் ஒன்று, என் மகன் எந்தப் பெண்ணையும் காதலிக்கவிடமாட்டேன்.

சங்கு: அப்படியெல்லாம் ஆத்திரத்திலே சொல்லாதே அண்ணே—

சந்தனம்: அமைதியாகத்தான் சொல்லுகிறேன்—போன மாதம கூட பையன் என்னைப் பார்க்கவந்திருந்தானே, அப்போதும் அவனுக்கு 'யாரையும் காதலிக்காதே! என்று சொல்லித்தான் அனுப்பினேன்—அழகை விரும்பும் அரக்கிகளிடம்காதலா கூடா தப்பா கூடாது!

சங்கு: சரி அண்ணே வா—அதோ களிப்பட்டை வந்துவிட்டது! வா, சாப்பிடலாம்—நாளைக்கு எங்கே நம்ப ரெண்டுபேரும் சாப்பிடப் போறோம்—நீ வெளியிலே நான் உள்ளே!... வாண்ணே வா!

(இருவரும் சாப்பிடப் புறப்படுகிறார்கள்.)

❀ ❀ ❀

இரவு நேரம்—நிலவு. ஒளி மழை பொழிந்து கொண்டிருக்கிறது. விடுதலையடைந்த, சந்தனம் தன் புத்திர சந்தானத்தை எண்ணிப்பூரித்தபடி அவனைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சி பொங்க நடந்து கொண்டிருக்கிறான் மகன் வாழும் உணவு விடுதி நோக்கி! உலகத்தைப் பல ஆண்டுகளுக்குப்பிறகு பார்க்கும் அவனுக்கு எத்தனை எத்தனையோ புதிய நினைவுகள் மோதுகின்றன. மகன் நன்கு படித்துத் திறமை பெற்றிருப்பான்—தான் சொன்ன "காதல் ஒரு கடும் விஷம்" என்ற ஒரு உபதேசத்தைக் கடைப்பிடிப்பான். தந்தை சொல் தவறாத தனயனைப் பெற்ற பாக்கியமே பாக்கியம்-இப்படியெல்லாம் எண்ணிபடி நடக்கும் சந்தனத்தின் காதில் ஏதோ ஒரு ஒலி கேட்கிறது நிலவு மழையிலே அவனும பலமுறை கீதம் இசைத்திருக்கிறான் குமுதாவுடன்... அதே போன்ற ஒரு கீதம். அவனுக்கு ஆத்திரம் ஊட்டும் கீதம் இப்போதும் கேட்கிறது உளிர்ச்சியூட்டும் இசைதான்; அவனுக்கு பழக்கமான சொற்கள் தான்;

ஆனால் இப்போது மட்டும் அவனுக்கு அந்த கீதம் இடிமுழக்கமாக இருப்பானேன்? குமுதா பாடிய அதே பாட்டுத்தான் அது! சந்தனத்தின் தோளிலே முகத்தைப் பதித்துக்கொண்டு அவன் காதலி இசைத்த கீதம்தான் அது!

'காதலோர் தொடர் கதையே!

சாதலும்ஏற்போம்- அனுச் சஞ்சலமும் அடையோம்—எனும

காதலோர் தொடர் கதையே!'

இந்த எழிலும் எழுச்சியுமிக்க வரிகள் சந்தனத்தின் உள்ளத்தை தொட்டுஉலுக்கிவிட்டன; 'ஆம்; குமுதாதான் அப்படிப்பாட முடியும்—வேறு யாரும் பாடமுடியாது' என்று தனக்குள் கூறிக்கொண்டான். கண்களில் கனல் கிளம்பியது. 'குமுதா!' என்று பயங்கரமாக உச்சரித்தபடி இசைவந்த பக்கம் பாய்ந்தான். அவன் எதிர்பார்த்தபடி பாடியது இருவர்தான்! அவர்களிடம் வேகமாக நடந்தான் சந்தனம. அவர்கள் இருவரும் தழுவியபடி பேசிக்கொண்டிருந்தனர். அவனும் அவளும்தான்!

அவன்: கண்ணே—எவ்வளவு களிப்பூட்டும் தென்றல் இந்தப் பாட்டு! .. ஆயிரம்முறை பாடினாலும் அலுப்புஏற்படுவதில்லையே கேட்க—சொல்லாமுமா? அல்லது சுந்தரியின் குரல் நயமா?

அவள்: இரண்டுமில்லை...கருத்தற்ற சாகித்யமும், கனிவற்ற தொனியுங்கூட கற்கண்டும் தேனுமாகிறது இந்தக் கண்ணாளின் மடியிலே நான் படுத்திருக்கும்போது !...

அவன்: சித்ரா.....என் சிந்தை கவர்ந்தவளே... இந்த நாள் போல் எந்த நாளும் இன்பம் மல்லவா?...

அவள்: இந்தநாள்போல் என்று சொல்லாதீர்கள்...இந்தநாள் தோற்றதென அடுத்த நாள் சொல்லும். அடுத்தநாளை மறுநாள் வெல்லும்—அந்த மறுநாளை இன்னொரு புதுநாள் கொல்லும்—என்ன செல்வம் சரிதானே!

ஆம்—சந்தனத்தின் மகன் செல்வம்தான் சித்ராவுடன் காதல்மொழிபேசிக்களித்துக்கிடக்கிறான். அதைச் சந்தனம் நேரில் பார்த்துவிட்டான். 'காதலோர் கடும் விஷம்' என்று போதனை செய்தவனின் புத்திரன் பூப்படுக்கையிலே புதுப்பெண்ணின் மனத்தை அள்ளிக் கொண்டிருக்கிறான். ஆத்திரம் தாங்காத சந்தனம் "அடே செல்வம்!" என்று பாய்ந்தான். அந்த பைங்கிளி சித்ரா பயந்துவிட்டாள். அவளால் அந்த அகோரமான மனிதனின்முகத்தைப்பார்க்க முடியவில்லை, அலறினாள். சந்தனம் அந்தப் பெண்ணை ஓங்கி அறைந்தான், ஓடிப் பிடித்து! அடியைப் பெற்றுக் கொண்டுஅவள் ஓடிவிட்டாள் "அப்பா அப்பா!" என்று செல்வம் கதறினான். 'உன் உயிரை எடுத்துவிடுகிறேன் வா" என்று உறுமியபடி செல்வத்தின் கையைப் பிடித்து பரபரவென இழுத்துக் கொண்டு போனான் சந்தனம்.

(தொடரும்)

★★★★★★★-★★★★

தி.மு. கழகம் என்றும் உயிர் வாழும்!

"நான் எல்லோரையும் எங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ளத் தயார்; கருணாநிதியை மாத்திரம் சேர்த்துக் கொள்ள மாட்டேன்"—இது போன மாதம் எம் ஜி ஆர்; நேற்றைக்கு 'கருணாநிதி கூட எங்கள் கட்சிக்கு வரலாம்'—இது இந்த மாத எம் ஜி ஆர்.

என்ன வேடிக்கை! முரண்பாடே உனக்குப் பெயர்தான் இன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சரா என்று கேட்கத்தான் தோன்றுகிறது

பெரிய உள்ளம் பரந்த உள்ளம், போன மாதம் எனக்கு இடம் தராத உள்ளம், இந்த மாதம் கருணாநிதிக்குக்கூட இடம் உண்டு என்ற வகையில் பதிலைத் தந்திருக்கிறார்.

ஆனால் கருணாநிதி உடம்பில் ஓடுகின்ற இரத்தம், சுயமரியாதை இரத்தம்; பெரியார் அண்ணா பட்டுக்கோட்டை அழகிரிசாமி போன்றவர்கள் இருந்த கூடாரத்தில் வளர்ந்த சுயமரியாதை இரத்தம்தான் கருணாநிதியின் உடம்பில் ஓடுகின்ற இரத்தம்.

சுயமரியாதை இரத்தம் ஓடுகின்ற யாரும் இவருடைய காலில் போய் விழுந்து வணங்கி, இன்னொரு தமிழனைக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பர் செயலில் சில பதவிக்காக சில பவிசுக்காக சில அந்தஸ்துக்காக, ஆடம்பரங்களுக்காக ஏற்கனவே அனுபவித்ததை விட்டுவிடக் கூடாது என்ற அரிப்பின் காரணமாக ஈடுபடமாட்டார்கள்!

ஆனால் எங்களுக்கு இருக்கிற நம்பிக்கை எல்லாம் இந்தக் கழகம்; இந்த இயக்கம் ஒரு தனிப்பட்ட ஆளை நம்பியிருக்கின்ற இயக்கம் அல்ல. கருணாநிதி மறைந்து போய்விட்டாலும் கழகம் இருக்கும்; அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகும் கழகம் இருக்கிறது; இருந்தால்தான் அது அண்ணாவின் தலைமைக்குப் பெருமை; அண்ணாவின் மறைவோடு கழகம் அழிந்து விட்டது என்று சொன்னால் அது அண்ணா அவர்களின் தலைமைக்குப் பெருமையில்லை.

—கலைஞர்

இராயபுரம் பொதுக்கூட்டம்

31—7—78

★★★★★★-★★★★★



பள்ளிப் பாடநூலில் வரலாற்றுக்கு இருட்டடிப்பா?

"கழக அரசு கவிழ்க்கப்பட்டு, ஒரு வழியாக சனநாயகம் கொலை செய்யப்பட்டான பிறகு தமிழ் இன விரோதிகள் மகிழ்ந்தனர், துள்ளிக் குதித்துக் கூத்தாடினர்.

நடிகராட்சி வந்ததும் அண்ணாவின் கொள்கைகள் முழுதும் அப்படியே வேக வேகமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. கருணாநிதிதான் அவ்வாறு செய்யவில்லை என்று நடிகர் கட்சியினரும் அவரை ஆதரிக்கும் சில தமிழின விரோத ஏடுகளும் பெருமையடித்துக் கொள்வதின் சூட்சுமம் இன்னும் தமிழ் மக்களுக்குத் தெரியாதது கொடுமையிலும் கொடுமை!

பாடத் திட்டத்தில் இந்த ஆண்டு நடந்துள்ள பெரிய மோசடி சாதரணமானதல்ல, கல்விக்கென்று நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் கூட ஆசிரியப் பணியாற்றியவர்தான் அவரும் இதற்கு எப்படி உடன்பட்டார் என்பது தான் வேதனையைத் தருகிறது.

தி.மு கழக அரசு அமையு முன்பு நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரையுள்ள வரலாற்றுப் பாடத்தில் சிந்து வெளி நாகரிகம் என்னும் தலைப்பில்:—

திராவிடர்கள் இந்த நாட்டின் பூர்வீககுடிகள் என்று "சிலரும்" வேறு நாட்டினின்றும் குடியேறியவர்கள் என்று "சிலரும்" கூறுவர் எது எப்படி இருந்த போதிலும் அவர்கள் நாகரிகம் மிக்கவர்களாக வாழ்ந்தார்கள்' என முடிப்பர். இதே போல ஆரியர்கள் வருகையும் இப்படியா அப்படியா என்றில்லாத குழப்பமான நிலையில் இருந்தது அதாவது உண்மையான பூர்வீகக் குடிகளான திராவிடர்களையும் வந்தேறிகளான ஆரியர்களையும் "இப்படியும் அப்படியும்" என்ற ஒரு குழப்பமான வரலாற்றுத் திருத்தாளம் இருந்தது.

அண்ணா ஆட்சி அமையப் பெற்றவுடனேயே திராவிடர்கள் பற்றி வரும்போது: 'திராவிடர்கள் இந்நாட்டின் பூர்வீகக் குடிகள்; இவர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் ஆகிய மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டு சிறப்பான நாகரிக வாழ்க்கை வாழ்ந்தார்கள்' என்னும் வரலாற்று உண்மை எழுதப்பட்டது.

பரமத்தி சண்முகம்

ஆரியர்கள் கைபர் கணவாய் வழியாக வந்ததும் அவர்களின் காட்டுமிராண்டித்தனமான பண்பாடற்ற வாழ்க்கை முறைகளும் அப்படியே கூறப்பெற்றிருந்தது

ஆனால் இந்த ஆண்டு, வரலாற்றில் திராவிடர் வாழ்க்கைச் சிறப்பு ஆரியர்கள் வருகை ஆகிய இரண்டு பகுதிகளுமே நீக்கப்பட்டுள்ளன இதுதான் அண்ணாவின் எண்ணம் ஈடேறும் வழியா?

கல்வி வரலாறு, போன்ற விவகாரங்களில் எல்லாம் எம். ஜி ஆர். புரிந்து செயல்படவேண்டும் என்று நாடு எதிர்பார்க்கவில்லை அப்படி எல்லாம் எதிர்பார்ப்பதும் ஏமாற்றமே அளிக்கும் அந்தத் தத்துவப் பெட்டகம் இந்தச் சில்லறை விஷயங்களில் தனது மேலான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் தீது!

கல்வியமைச்சராவது இதனை காணாது இருக்கலாமா? இந்திய வரலாற்றில் ஆரியர் வருகையும் திராவிடர் வாழ்க்கைச் சிறப்பும் இல்லையாயின் அது எப்படி ஒரு வரலாறாக இருக்கமுடியும்

'இதோ எந்தன் தெய்வம் முன்னாலே! என்றும், எங்கோ இருந்து என்னை அழைக்குது ஓர் அன்புக் குரல் என்றும் இலக்கிய நடையில் இருகை விரித்தோடும் இனத் துரோகிகள் உணரட்டும்!

தன் அண்ணன் வாலியைக் காட்டிக் கொடுத்த சுக்ரீவன் கூடத்தான் அனாதையாக விடப்பட்ட என்னை நோக்கி ஓர் அபயக்குரல் வந்தது. அது வந்த திசை நோக்கினேன் அந்தக் குரல் ஸ்ரீ இராமச்சந்திர பிரானுடையதாக இருந்தது' என்று நெக்குருமாறு கூறியதாகக் கம்பன் கூறுவான்; ஏ இனத் துரோகிகளே சுக்ரீவன்களாக வீடணர்களாக. பிரகலாதன்களாக மாறி வரலாற்றில் அசிங்கமான அடையாளங்களாகதீர்கள், கல்வித்துறையில், அரசியலில், வேலை வாய்ப்பில் எல்லாவற்றிலுமே தமிழ்நாடு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய காலத்துக்குப் பின்னோக்கி இழுக்கப்படுகிறது. தாழ்ந்த தமிழகமே நீ உணர்வாயா? உயர்வாயா? உய்வாயா?

மருத்துவத்துறையில் மகத்தான சாதனை!

இலண்டன் —புதுமைகளின் பிறப்பிடம்! நவீன நாகரிகத்தின ஊற்றுக்கண்! அண்மையில் இம்மாபெரும் நகரிலுள்ள 'ஓல்டுஹோம்' என்ற மருத்துவ விடுதியில் முப்பது வயதான பெண்ணொருத்திக்குச் செயற்கைக் குழந்தை பிறந்துள்ளது.

ஆணின் உயிர் வித்துக்களைப் பெண்ணின் கரு முட்டையில் இணைத்து, சோதனைக் குழாய் பெற்றெடுத்த இந்தக் குழந்தை 'உலகில் வாழும் உயிர்களைப் படைத்தவன் கடவுள்தான்' என்ற ஆத்திகர்களின் செல்லரித்த சித்தாந்தத்தின் மீது மரண அடி கொடுத்திருக்கிறது

கிறித்துவமதக் கோட்பாட்டை மண் கவ்வச் செய்து, பைபிள் கருத்துக்களைப் பொய்யாக்கிய அறிவுலக மேதை டார்வினின் 'பரிணாம வளர்ச்சி'க் கொள்கைக்குப் பிறகு — இந்தச் செயற்கைக் குழந்தை விஞ்ஞானத்தின் மாபெரும் சாதனையாகத் திகழ்கிறது.

இப்போது வெளிவந்திருக்கும் இன்னொரு உண்மை 'ஆன்மீகவாதி'களின் கடவுள் கோட்பாட்டுக் கொள்கைக்கு 'வெடி' வைத்துள்ளது.

அதாவது —

இத்தாலி நாட்டில் இதற்கு முன்பே ஐம்பது செயற்கைக் குழந்தைகளை சோதனைக் குழாய்கள் மூலம் 'பெற்றெடுத்து' விட்டார்களாம் மருத்துவர்கள்'

1961-ஆம் ஆண்டிலிருந்து 1973-ஆம் ஆண்டு வரை பிறப்பிக்கப்பட்ட இந்த ஐம்பது செயற்கைக் குழந்தைகளைப் பற்றிய தகவல்களை மருத்துவர்கள் வெளியிடாது வைத்திருந்தனர்

காரணம் — மக்களைப் படைத்தவன் அந்தப் 'பரமபிதா'தான் என்று ஏராளமான பணத்தை வாரி இறைத்து, உலகம் முழுக்க, சந்துபொந்துகளில் எல்லாம் ஓயாத பிரச்சாரம் செய்யும் கிறித்துவ மதக் குருக்கள் 'வரிந்து கட்டிக் கொண்டு' சண்டைக்கு வந்துவிடுவார்கள் என்பதால்'

'உலகம் தட்டையானது' என்று கூறும் பைபிள் வாக்கியத்தை மறுத்துரைத்து, 'உலகம் உருண்டையானது என்ற உண்மையைக் கண்டுபிடித்து வெளியிட்டதற்காக ஆண்டவனின் அடியார்களால் கலிலியோ பட்ட துன்பங்கள் கொஞ்சமா, நஞ்சமா?

ஏற்கனவே — மாண்டவனுக்கு மீண்டும் உயிரூட்டும் பணியில், முழுவெற்றியை நோக்கி மருத்துவ உலகம் முன்னேறி வருகிறது'

இப்போது—

'பகவானின் அனுக்கிரகம்' இல்லாமலேயே படைப்புத் தொழிலைச் செய்வதிலும் வெற்றி கண்டுவிட்டது'

—இனி இந்த உலகில் கடவுளுக்கென்ன வேலை இருக்கிறது?

இன்னும் வேண்டுமா இருபதம்சத் திட்டம்?

" முன்பு இருந்த அரசு வகுத்த இருபது அம்சத் திட்டம் ஓர் இடைக்கால ஏற்பாடாகும். அந்த இருபது அம்சங்களுக்குள்ளேயே ஒன்றுக்கொன்று சரியான தொடர்பு கிடையாது. அரசாங்கம் அங்கீகரித்த பொருளாதாரத் திட்டத்துக்கும் அதற்கும் தொடர்பு கிடையாது.'

—தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய்.

'காலாவதி'யாகிப் போன அந்த இருபது அம்சத் திட்டத்தைக் கட்டிக் கொண்டு 'மாரடிப்பதை' இன்றைய அ. தி. மு க, ஆட்சி இன்னும் விட்டபாடில்லையே

எடுத்துக் காட்டாக —

தமிழக மின் வாரியத் துறை அனுப்பும் மின் கட்டணப் பட்டியலில் (Bill) சிவப்பு எழுத்துக்களில்,

"ஏற்றம் பெற இருபது அம்சத் திட்டம்"

—போன்ற பழைய 'கோஷங்களை' இன்று கூடக் காணமுடிகிறதே.

— ஆக்கூர் முத்துராமன்

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922

நாம் நாடுவோர் தவறாமல் நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு: விற்பனை நிலையம்

92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

உரிமையாளர்

பே. தேவசகாயம்

தனிச்சிறப்பு: சிலேபி, தேக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

கிளைகள்: 261, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி

12, அழகர்கோவில் சாலை, 72 C டவுன்ஹால்ரோடு, மதுரை.

காவல்துறையினரின் காட்டுமிராண்டித்தனம்!

உதகமண்டலம் பகுத்தறிவு மன்றத்தின் தலைவரும் ஆசிரியருமான இராஜாமணி என்பவர் இந்தியாவின் 'இருண்ட நாட்களான' நெருக்கடி நிலை காலத்தின்போது காவலர்களால் கைது செய்யப்பட்டார்.

அவர் ஒன்றும் கள்ளச் சாராயம் காய்ச்சவில்லை; கள்ள நோட்டு அடித்து மாற்றவில்லை; கடத்தல் வேலையில் ஈடுபடவில்லை; நாட்டைக் காட்டிக்கொடுக்கும் 'ஐந்தாம்படை' வேலையும் செய்யவில்லை; இந்திராவின் சர்வாதிகாரத்தனமான ஆட்சியை எதிர்த்துக்கூடக் குரல் எழுப்பவில்லை

—பின் ஏன் அவர் கைது செய்யப்பட்டார்?

ஒரே காரணம்—

அவர் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பியது தான்!

அவர் செய்த ஒரே குற்றம்—நாத்திகராக இருந்ததுதான்!

மதச்சார்பற்ற சோஷலிச ஜனநாயக நாடான இந்தியாவில் நாத்திகக் கருத்துக்களை வெளியிட்ட காரணத்திற்காகவே ஒருவர் கைது செய்யப்பட்டது வேடிக்கையாக இல்லையா? ஆம்—இந்த வேடிக்கை இந்தியாவைத் தவிர வேறு எங்கும் நடக்காது!

இராஜாமணியைக் கைது செய்து சிறையில் அடைத்ததோடு அதிகார வர்க்கத்தின் கைக்கூலிகளான காவலர்கள் திருப்தி அடைந்துவிடவில்லை அவரை அடித்து மிதித்து துன்புறுத்தி மகிழ்ச்சி கண்டிருக்கிறார்கள்

இந்தச் சித்திரவதைகளினால் இராஜாமணியின் கை விரல்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டன

நெருக்கடிகால அத்துமீறல்கள் குறித்து விசாரித்துவரும் நீதிபதி அனந்தநாராயணன் இராஜாமணிக்குக் காவலர்கள் இழைத்த கொடுமைகளை விசாரித்தபோது. 'நாத்திகக் கொள்கைக்காக யாரையும் கைது செய்யவோ துன்புறுத்தவோ கூடாது இது ஒரு சுதந்திர நாடு' என்று கூறியுள்ளார். அதுமட்டுமல்ல—

காவலர்களின் ஈவிரக்கமற்ற அநீதியான போக்குகள் குறித்துக் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

இதுவரை நான் விசாரித்த (அவசரகால அத்துமீறல்கள் குறித்து) வழக்குகளில் ஒரு தடவைகூட காவலர்கள் புத்திசாலித்தனமான முன்னெச்சரிக்கையுடன் தடுப்புக் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. காவலர்கள் இயந்திரங்கள் போலவும், காவல்துறையின் கொள்கையை நிறைவேற்றும் கருவிகள் போலவும் நடந்து கொண்டிருக்கிறார்கள்'. என்று சாடியுள்ளார்.

நீதிபதி அனந்தநாராயணனின் இந்தக் கூற்று காவலர்களின் 'காட்டுமிராண்டித்தனமான' போக்கைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.

நெருக்கடிக்கால அத்துமீறல்கள் களின் காரணமாகத்தான் காவலர்களின் மனப்போக்கு சீர்கெட்டு, அவர்கள் இதயமே இல்லாதவர்களைப் போன்று குரூரமாகச் செயல்படத் தொடங்கி விட்டார்கள் என்று யாராவது நினைத்தால் அது முற்றிலும் தவறாகும்.

ஏனென்றால்—

இப்போது இந்தியாவில் 'நெருக்கடி நிலை' தூக்கி எறியப்பட்டு விட்டது; காரணமின்றி யாரையும் கைது செய்து சிறையிலடைத்துச் சித்திரவதைகள் செய்ய அனுமதிக்கும் 'கறுப்புச் சட்டமான மிசாவையும் ஆழக் குழி தோண்டிப் புதைத்தாகி விட்டது.

என்றபோதும்—

காவலர்களின் வக்கரித்த பழைய மனப்பான்மை துளியும் மாறியதாகத் தெரியவில்லை, அவர்கள் தங்களின் 'அடாவடித் தனமான நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்ததாகவும் தெரியவில்லை

இந்தியா முழுக்க இருக்கின்ற பெரும்பான்மையான காவல் நிலையங்கள், இன்னும் உயிர்களைக் காவு கொள்ளும் மரண பீடங்களாகவும், பெண்களின் கற்பைச் சூறையாடும் பயங்கரக் குகைகளாகவும்தான் உள்ளன

தமிழ்நாடு இதற்கு விதி விலக்கல்ல

இவ்வாண்டு ஜூலைத் திங்களில் மட்டும் காவல் நிலையங்களில் மூன்று சாவுகள் கோரநடனமாடியுள்ளன. 'விசாரணைக்கு' என்று சொல்லி இழுத்து வந்தவர்களை அடித்தே கொன்று போட்டிருக்கிறார்கள் காவலர்கள்!

திருச்சி மாவட்டத்திலிருக்கும் கல்லகம் கிராமத்தைச் சேர்ந்த நாற்பத்துநான்கு வயதான அடைக்கலசாமி என்பவர் காவல் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார்—'குடித்திருந்ததாகக் கூறி!

மறுநாள் குடித்திருந்ததற்கான சான்றிதழ் வாங்க மருத்துவ விடுதிக்கு இட்டுச் செல்லப்பட்டார்.

ஆனால்—

அதற்கு முன்னரே அவர் மாண்டு விட்டார்—காவல் நிலையத்தில் வைத்துக் காவலர்களால் ஈவு இரக்கமில்லாமல் அடித்ததால்'

இந்த உண்மை வெட்ட வெளிச்சமான பிறகு ஊர் மக்கள் ஒன்றுகூடி காவல்நிலையத்தின்முன் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்!

மீண்டும்—

இம் மாதம் பதினொன்றாம் தேதி இரவு 'விசாரணைக்கு' என்று அழைத்துச் செல்லப்பட்டார் தி மு க. தொண்டரான சென்னை கொருக்குப்பேட்டையைச் சேர்ந்த முனுசாமி என்பவர் மறுநாள் இரவு அவரும் மருத்துவ விடுதியில் மாண்டு போனார்—'கண் மூக்கு' தெரியாமல் காவலர்கள் அடித்ததால்

★ பழனி சித்தார்த்தன் ★

காவலர்களின் இந்த அட்டகாசங்களைக் கண்டித்து சர்வ கட்சியினரும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்

மறுபடியும்—ஜூலைத் திங்கள் இருபத்தாறும் தேதி தஞ்சை மாவட்டத்திலிருக்கும் நடுக்காவேரி காவல் நிலையத்திற்கு ஒருவர் இழுத்துச் செல்லப்பட்டார். ஒரு திருட்டு வழக்கில் அவர் தொடர்பு கொண்டிருக்கக் கூடும் என்பது காவலர்களின் சந்தேகம். தங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள அவரை விசாரித்திருக்கிறார்கள். காவலர்களின் 'விசாரணை' எப்படி இருக்குமென்று தெரியாதா'

வழக்கமான அடிகள்—உதைகள்—குத்துகள்—மிதிகள்—

இறுதி மூச்சைவிட்டுத்தரையில் பிணமாக விழும் வரை அவரைச் சித்திரவதைகள் செய்திருக்கிறார்கள் காவலர்கள்.

அவரைக் காவலர்கள் அடித்தே கொன்றதுஉண்மைதான் என்பதைநடந்த விசாரணை வெளிப்படுத்தியுள்ளது'

அவருடைய சாவுக்குக் காரணமான ஆறு காவலர்களையும் தாற்காலிக வேலை நீக்கம் செய்து, அவர்கள் மீது வழக்கும் போட அரசு முன்வந்துள்ளது சந்தேகத்திற்கிடமில்லாமல் வரவேற்கத் தக்க ஒரு நடவடிக்கை தான். ஆனால்—

இந்த ஒரு விசாரணை மட்டுமே காவலர்களின் போக்கை மாற்றி அமைத்து அவர்களைத் திருத்திவிடும் என்று நம்புவதற்கில்லை.

'காக்கி உடுப்பை மாட்டிக் கொண்டதாலேயே எதையும் செய்யலாம்' என்ற வேரூன்றிவிட்ட காவலர்களின் எண்ணப் போக்கை அடியோடு மாற்ற முதலில் ஏதாவது வழி காணப்பட வேண்டும்

தவறிழைக்கப்பட்டதாகத் தெரியவரும் காவலரை—அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்த போதும்—உடனே விசாரித்துக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் எல்லாவற்றிற்கும் மேலாக—

மக்களிடம் காவலர்களுடைய அணுகுமுறையை நாககரிமானதாக மாற்றி கைதிகளிடம் சிறிதாவது மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ளப் பயிற்றுவிக்க வேண்டும்.

கடத்தல் மன்னர் பேசுகிறார்!

★

கேள்வி : நீங்கள் கடத்தல் உலகின் 'முடிசூடா' மன்னரானது எவ்வாறு?

பதில் : ஒரு போதும் கடத்தல் வேலையில் நான் ஈடுபட்டது கிடையாது. அப்படிச் சொன்னவர் யார்?

கேள்வி ; நெருக்கடி நிலையின்போது 'மிசா'வின் கீழ் நீங்கள் சிறையில் அடைக்கப் பட்டீர்களே?

பதில் : பெரும்பாலோர் அடைக்கப் பட்டது போலவே... நானும் அடைக்கப் பட்டேன். பரோடா வெடிகுண்டு வழக்கிற்காக ஜார்ஜ் பெர்னாண்டஸ் கூட அடைக்கப்பட்டாரே...

கேள்வி : எப்போதவது நீங்கள் கடத்தல்காரராக இருந்ததுண்டா?

பதில் : இல்லை!

கேள்வி ; அப்படியென்றால் இருநூற்று ஐம்பது பேர்களுடன் சேர்ந்து நீங்களும், ஜெயப்பிரகாஷ் நாராயணன் முன் இனிக் கடத்தல் வேலைகளில் ஈடுபட மாட்டோம் என உறுதி மொழி எடுத்தது எவ்வாறு?

பதில் : அம்மாதிரியான உறுதிமொழி எதுவும் எடுக்கவில்லை. 'தேச விரோதச் செயல்களில் ஈடுபடமாட்டோம்' என்ற உறுதி மொழிதான் எடுத்தோம். நீங்கள் கூட அம்மாதிரியான ஓர் உறுதிமொழி எடுக்கலாம் இல்லையா?

கேள்வி : உங்கள் கடந்த காலத்தின் பெரும் பகுதியைத் துறைமுகப் பகுதியில் கழித்தவர் என்ற முறையில், கடத்தல் குழுவினர் எவ்வாறு இயங்குகின்றனர் என்று சொல்ல முடியுமா?

பதில் : மிக எளிதாக- அவர்கள் துறைமுகத்து அதிகாரிகளை 'விலைக்கு' வாங்கி விடுகிறார்கள்.

கேள்வி : எல்லோரையுமா விலைக்கு வாங்கி விடுகிறார்கள்?

பதில் : அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லாமல் எவ்வாறு கடத்த இயலும் என நினைக்கிறீர்கள்? ஒரு சில நேர்மையான அதிகாரிகளும் இருக்கலாம்...

கேள்வி : இந்த வேலைக்கு (கடத்தல்களுக்கு) மூலதனம் போடுபவர் யார்?

பதில் : யார் கடத்தல்களில் ஈடு படுகிறார்களோ அவர்களே தான்...

கேள்வி ; அவர்கள் யார்?

பதில் : பெரும் பான்மையான மார்வாரிகள்.,.

கேள்வி : இது அபாண்டம் இல்லையா?

பதில் : இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய அவர்களுடைய சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். உண்மை தெரியும்...

கேள்வி : பெரிய அளவிலான கடத்தல் வேலைகள் ஓய்ந்து விட்டதென நீங்கள் கருதுகிறீர்களா?

பதில் : ஆம், இப்போது 'சிறிய மீன்கள் தான்; இதில் 'நீந்தி விளையாடிக் கொண்டிருக்கின்றன பயணிகளும், அரசியல் பிரமுகர்களும் இப்போது கடத்தலில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்றைக்கு 'மார்க்கெட்'டிற்குச் சென்று ஒரு அயல்நாட்டு 'ரேசர் பிளேடு (RAZOR BLADE) வாங்க விரும்பினால் அது உங்களுக்குக் கிடைக்காது; இதற்கு முன் ஒரு லாரி நிறைய வேண்டுமானாலும் கிடைக்கும். இப்போது ஒரு பயணி சுங்க அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்ட பொருட்களை சட்டபூர்வமாக இங்கு கொண்டு வர முடியும். இந்தப் பொருள்கள் பிறகு இருமடங்கு, மும்மடங்கு இலாபம் வைத்து விற்கப்படுகின்றன. அந்தப் பயணி ஒரு 'குட்டி' கடத்தல்காரர்!

[16-7-78 'இண்டியா டுடே' ஆங்கில இதழுக்குப் பிரபல கடத்தல் மன்னனாக இருந்த ஹாஜி மஸ்தான் அளித்த பேட்டியிலிருந்து ஒரு பகுதி...]



இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயன்றதாகத் தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணையில் கலந்து கொள்ள கடந்த ஜூலை 31-ஆம் நாள் சென்னை எழும்பூர் நீதிமன்றத்திற்கு கழகத் தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர், பொருளாளர் சாதிக் உட்பட குற்றம் சாட்டப்பட்டுள்ள 135 தோழர்களும் வழக்கறிஞர்களும், பார்வையாளர்களும் கால் நடையாகச் சென்ற காட்சி.

கண்ணீரைத் துடைக்கிறார் கலைஞர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்தார்!

அவர்களின் கண்ணீரைத் துடைக்க கழகத்தின் சார்பில் இருபத்து ஐயாயிரம் ரூபாய் காணிக்கையாக வழங்கினார். அதனைப் பெற்றுக் கொள்ளவும் அங்கே அதிகாரி எவரையும் காணவில்லை இது இராமச்சந்திர ராஜ்பத்தில் தர்மம் போலும்!

ஆட்சியில் இருந்தால் இந்தப் புண்ணியவான் ஆயிரம் நன்மைகள் செய்வாரே என்று கலைஞரின் திக்கு நோக்கி அழுதவாறே ஏழைத் தாய்மார் ஒருவரின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

விழுப்புரத்து மக்களின் விழிகளில் வழிகின்ற கண்ணீரைத் துடைக்கிறார் கலைஞர். நடிகரோ அந்தமக்களின் கண்ணீரை துடைக்க அல்ல தமிழ் நாட்டு மக்களை என்றும் போல் ஏமாற்றக் கண்துடைப்புச் செய்கிறார் அதன் விளைவே விழுப்புரம் சம்பவத்திற்கு ஒன்மேன் கமிஷன்

பொல்லாத நிருபர்களும் 'புனிதரின்' பதில்களும்!

திருச்சி நிருபர்கள் முதல்வர் எம். ஜி ஆரை நோக்கி முதல் கணையைத் தொடுக்கிறார்கள் :

கேள்வி:— பாண்டிச்சேரி அமைச்சர் மீது விசாரணை நடத்த கவர்னர் "பட்வாரி" உத்தரவிட்டிருப்பது பற்றி தங்கள் கருத்தென்ன?

பதில் :— அ. தி. மு. க. பொதுச் செயலாளர் என்ற முறையில், நான் கூறிக் கொள்வதெல்லாம்—

மக்களின் உணர்ச்சிகள் சில நேரம்—திட்ட மிட்டும் நடக்கலாம். திட்டமிடப் படாமலும் நடக்கலாம்

ஐயோ; ஐயோ. என்ன தத்துவம்; என்ன தத்துவம்...! பாண்டிச்சேரி மக்களின் உணர்ச்சி யிருக்கிறதே - அது திடீரென்று ஒன்று கூடி— பாண்டி ஒதியஞ்சாலைத் திடலில்—மாநாடு கூட்டி திட்டங்களைத் தீட்டும், ஒதியஞ்சாலைத் திடல் வாயிற்படி திறக்கவில்லை என்றால்...

அந்த உணர்ச்சிகள் திட்டமிடாமலேயே, புதுவை போலீஸ் மந்திரி ராமச் சந்திரனின் உணர்ச்சியைக் கூட்டி வந்து "ராதாபாயின்" உணர்ச்சியைப் பலாத்காரம் செய்யச் சொல்லும் அப்படித்தானே?

இவர்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

இவர்தான் தாய்க்குலத்திற்கு அட்வகேட் ஜெனரல்,

வெற்றிகொண்டான்

தமிழ்நாடு செய்த பாவத்தைப் பார்த்தீர்களா?

"சர்க்காரியா விசாரணையில் சம்பந்தப்பட்ட, பலர் இப்போது உங்கள் பக்கம் இருக்கிறார்களே? என்று அடுத்த கணையை நிருபர்கள் வீசுகிறார்கள்

"பணம் கேட்டது யார்? அந்தப் பணத்தை லஞ்சமாகப் பெற்றது யார்? என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பணம் வாங்காதவர்களைக் குற்றவாளி என்று எப்படிக் கூற முடியும்" என முழங்கி விட்டார் முதல்வர்.

பொல்லாதவர்கள் இந்த நிருபர்கள்- அடுத்த கணையை வீசுகிறார்கள்:

'அப்படியானால் நெடுஞ்செழியன், ப. உ. சண்முகம் போன்றவர்கள் மீது சர்க்காரியா அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டு உள்ளதே?"

பதில் - லஞ்சம் வாங்கியதாக நிரூபிக்கப்பட்டால்; அவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தாலும், எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் வழக்கு மன்றத் தீர்ப்புகது ஏற்ப, நிச்சயம் நடவடிக்கை எடுப்போம்"

'கோயபல்ஸ்' செத்துப் போகவில்லை! எம். ஜி. ஆராக 'மறுபிறப்பு எடுத்துள்ளான்! நெடுஞ்செழியனாலும், ப. உ. சண்முகமானாலும், லஞ்சம் வாங்கியவர்கள் என்று கையெழுத்துப் போட்டு குடியரசுத் தலைவரிடம், 1972, நவம்பர் மாதம் 6-ந் தேதி மனுக் கொடுத்து விட்டு,

இன்று நிரூபிக்கப்பட்டால் என்று கூறும் எம். ஜி. ஆரை விட 'முதல் அப்ரூவர்' வேறு யார்?

இதைவிட 'அதிசயம் அடுத்த கேள்வியும் - பதிலும் தான்

சண்முகத்தைத் தொடர்ந்து பலர் அ. தி. மு. க. வில் சேருவார்களா?

பதில் :— யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும்; அ. தி. மு. க; வில் சேரலாம். எம் எல். ஏக்கள் தான் சேருவார்கள் என்று இல்லை! ஏன். கருணாநிதிகூட— இங்கு வரலாம்'.

"யார் வேண்டுமானாலும் அ. தி. மு. க வில் சேரலாம் என்றால் அது நடக்காது. அவர்—நாணயமானவரா, அவர்—லஞ்சம் வாங்காதவரா, என்று அவரைப் 'பரிசோதனை' செய்து, அவர் நேர்மையானவர் என்று தெரிந்தால்தான்- அ. தி மு. க வில் சேர்த்துக் கொள்வோம்"

என்று ஒருசமயம் முழங்கிய 'புத்தர் இன்று எவர் வேண்டுமானாலும்; சேரலாம் என்று மனுப போடுவது எதற்காக?

கடைசியாக—

நிருபர்கள் கேட்காத கேள்வியை, திருச்சி வாசி ஒருவர் கேட்டு விட்டுப் பதிலும் அவரே சொன்னார்.

கேள்வி :— நம்முடைய முதல்வர் யாரும் லஞ்சம் வாங்கக் கூடாது,—யாரும் லஞ்சம் வாங்கக் கூடாது,—என்கிறாரே?

பதில் :— பிறர் யாரும் வாங்கக் கூடாது என்றால்,

நகராட்சித் தேர்தல் நடத்த, வரிப் பாக்கி பூராவும் கட்ட நாங்களே வாங்குவோம்! என்பது தானே பொருள்!

விரைவில் தொடங்குகிறது

'ஊழ் வினை'

தென்னரசு எழுதும் மற்றொரு உண்மைக் கதை

வேகமாக விற்பனையாகிறது!

பரபரப்பான தகவல்களுடன், விறுவிறுப்பான தமிழ் நடையில் கலைஞர் அவர்களின் 55-வது பிறந்த நாளன்று கலைஞரிடம் காணிக்கையாக வழங்கப்பட்ட நூல்!

அடுத்த முதல்வர் கலைஞரே!

எஸ். வி வேலன்

விலை 0—75 காசு

தனி நூல் வேண்டுவோர் ரூ 1 மணியார்டர் செய்க: வியாபாரிகள் 25 சதவிகிதம் கமிஷன் நீக்கி பணம் அனுப்பவும்.

பாண்டியன் பதிப்பகம்,

108, உஸ்மான் ரோடு, தி. நகர் சென்னை—17.

மற்றும் எமது வெளியீடுகள்:

புகழ் பூத்த கலைஞர்	ரூ 4
காலத்தின் தலைவன்	ரூ. 1
கலைஞர் காவியம்	ரூ 0—50

குள்ள நெஞ்சினர் கூறுவரா பதில்?

மாதம் இருமுறை ஏடு ஒன்று இப்போதும் நடந்து வருகிறது. கோணலாக முகத்தைக் காட்டியும், கோழி முட்டைக் கண்களைக் காட்டியும் மக்களுக்குச் சிரிப்பூட்டும் தெருக் கூத்துத் தொழிலைக் கூத்தாடி போன்றது அந்த ஏடு.

எவ்வளவு பெரிய தூய கொள்கையாக இருந்தாலும் ஒரு சாதாரண நகைச்சுவைப் படத்தால் களங்கப் படுத்திக் களிப்படைவதில் அந்த ஏட்டுக்கு நிகர் அந்த ஏடுதான்.

பாரதியாருக்குப் பிறகு கண்ணதாசனே மிகப் பெரிய கவிஞர் என்று கண்ணதாசனைப் பாராட்டிக் கூறிய அந்த ஏட்டின் ஆசிரியர் பாரதியார் கண்ணதாசனுக்குச் சமமாக ஆக்கப்பட்டார் என்பதை இன்று வரை புரிந்து கொண்டிருப்பாரா என்பது சந்தேகமே.

பாவம், பாரதியாருக்கு நீண்டகாலத்திற்குப் பிறகு இப்படி ஒரு நிலை வந்திருக்க வேண்டாம்.

போகட்டும்!

நகைச்சுவை ஏட்டின் ஆசிரியர் இந்த அளவிற்குக் கண்ணதாசனைப் பாராட்டியதற்குக் காரணம் என்ன என்பதைத் தமிழ்ச் சமுதாயம் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்.

எதையும் எண்ணிப் பார்க்காத தமிழினம் இதைமட்டும் எண்ணிப்பார்த்துஏன் கவலைப் படப்போகின்றது'

கண்ணதாசன் பெரிய கவிஞர் என்று அந்த நகைச்சுவை எழுத்தாளர் கூறியுள்ளது பற்றி நமக்குக் கவலை ஏதும் இல்லை

கண்ணதாசனைப் பற்றி ஆராய்வதே தன்னைக் களங்கப்படுத்திக் கொள்வதாகும் என்று நினைக்கும் நமக்கு அவர் கவிதையைப் பற்றியோ அவர் கவிஞரா என்பது பற்றியோ ஆராய்ந்து தீர வேண்டிய அவசியம் இல்லை.

வாதத்திற்காக மட்டும் ஒப்புக் கொள்ளுகிறோம், அவர் பெரிய கவிஞர் தான்.

ஆனால்,

பாரதியாருக்குப் பிறகு கண்ணதாசன் தான் பெரிய கவிஞர் என்பதில் தான் நமக்குக் கருத்து வேறுபாடு.

அதுவும்,

பாரதியாருக்குப் பிறகு பெரிய கவிஞர் கண்ணதாசன் என்று கூறும் நகைச்சுவை எழுத்தாளரின் நெஞ்சத்தில் பொங்கி வழியும் வஞ்சகத்தை எண்ணும்போது தான் அவர் கருத்தில் உள்ள ஆலகால நஞ்சினை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பாரதியார்க்குப் பிறகு கண்ணதாசன் என்று கூறுவதாலேயே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைக் குறைவு படுத்திவிடலாம் என்பதுதான் அவருடைய அற்ப ஆசை.

பாரதிதாசன் என்றால் அவருக்கு மட்டுமல்ல, அவரைச் சார்ந்த அனைவருக்கும் பாகற்காய்க் கசப்பு

ஏன்..?

புரட்சிக் கவிஞர் நம்மவர் என்பது ஒரு காரணம் நமக்காக நம்மினத்தின் எழுச்சிக்காகப் பாடியவர் என்பது மற்றொரு காரணம்.

இந்த எழுத்தாளர் மட்டுமல்ல இன்னொரு தமிழ் அறிஞரும் இருக்கிறார். தமிழ்த்தாய்த் தாவின் மூத்த மாணவர் அவர் அது மட்டுமல்ல கலைமகளின் முழு ஆசியும் அவருக்கு உண்டு.

தில்லியிலிருந்து வெளியிடப்பட்ட ஒரு மலரில் தமிழின் இலக்கிய வரலாற்றினைத் தொகுத்து எழுதியுள்ளார்.

தென்னகன்

இலக்கிய வரலாற்றில் கவிதையின் பங்கினை விரிவாக அவர் எழுதும் போது பாரதியாரைப் பற்றிச் 'சாங்கோபாங்கமாக விரிவாகவும், விளக்கமாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பற்றி எழுதும்போது சிக்கனத்திலும் சிக்கனமாகக் குறிப்பிட்டு பாரதிதாசன் ஒரு பிரச்சாரக்கவிஞர் என்று எடுத்துக் காட்டிப் புரட்சிக் கவிஞரைச் சர்வ சாதாரணமாக ஆக்கி விட்டார்.

அதுமட்டுமல்ல,

புதுமைக் கவிஞர் வாணிதாசன், கவிப் பெருங்கோ முடியரசன் தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார் போன்றோரை மறைத்து நமக்கெல்லாம் தெரியாத அவர்களுக்கு வேண்டிய அநாமதேயங்களைக் கூட புகழ்பெற்ற கவிஞர்களாகக் கூறிப் பாராட்டியுள்ளார்.

அவற்றிற்கெல்லாம் என்ன காரணம் என்பதைத் தேசிய நீரோட்டம் பற்றிப் பேசும் தமிழர்கள் இன்றுவரை எண்ணிப் பார்ப்பதில்லை.

சிலராக இருந்தாலும், சக்தி பெற்றவர்களாக இருக்கின்ற அறிஞர்கள், எழுத்தாளர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைக் கவிஞராக ஏற்றுக் கொள்வதில்லை.

'மகாக்கவி' என்று புதிய சொல்லையே உருவாக்கிப் பாரதியாரோடு ஒட்ட வைத்துக் கூத்தாடுவோர்; பாரதி தாசனை மட்டும் அலட்சியப்படுத்துவது எதனால் என்பதை விரிந்த மனம் படைத்த உள்ளம் வேண்டும் என்று இன்று வரை பஜனை பாடும் தமிழர்கள் நினைத்தும் பார்ப்பதில்லை

நமக்காகப் பாடினார், இனத்திற்காகப் பாடினார். நம் மொழிக்காகப் பாடினார்; நம் நாட்டிற்காகப் பாடினார் என்பதல்தான் அவர். 'அவர்களுக்குப் பிடிக்காதவராக உள்ளார் என்பதை 'இந்தியம்' பேசும் தமிழர்கள் இன்று வரை உணர்ந்துகொள்ளவில்லை

இவ்வளவு விரிவான உண்மைகளை விளக்கமாக எடுத்துக் கூறி அடிப்படைப் போடுவது ஒரு சின்னஞ்சிறிய செய்தியை விளக்குவதற்காகத்தான்

அண்மையில்.

தில்லியில் உலகப் பொருட்காட்சி என்ற பெயரால் நடந்த திருவிழாப் பற்றி நாடு அறியும்.

உலகப் பொருட் காட்சியில் இந்திய அரங்கில் தமிழகத்தின் பங்கும் இடம் பெற்றிருந்தது.

அதற்காக மகிழ்ச்சியும் அடைகிறோம்; நன்றியும் கூறுகிறோம்.

இந்திய அரங்கில், தமிழ் நாட்டுக்கு உரிய இடத்தில் இரண்டு கவிஞர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன

ஒன்று வள்ளுவர் திருவுருவப் படம்; அதற்காக..

அளவற்ற மகிழ்ச்சி அடைகிறோம்; அகம் கனிந்த நன்றி கூறுகிறோம்

அவர்க்குப் பக்கத்தில் பாரதியாரின் படம்!

அதற்காக.

மிக மிக மகிழ்ச்சி அடைகிறோம் மேலான நன்றியைக் கூறுகிறோம்

நம்முடைய கேள்வி

வள்ளுவர்க்குப் பிறகு இலக்கியம் படைத்த இளங்கோவின் துறவிக் கோலமோ சீத்தலைச் சாத்தனார் சித்திரமோ. காவியப் பெரும் புலவன் கம்பனின் உருவப் படமோ ஏன் இடம் பெறவில்லை என்பதல்ல;

வள்ளுவர்க்குப் பிறகு பாரதியார் என்றால் இடைப்பட்ட இரண்டாயிரம் ஆண்டுகளின் தமிழ் இலக்கிய வரலாறு இருண்டு போயிற்றோ என்று காணவந்த மேலை நாட்டினர் கருதி விடுவார்களே என்பது கூட அல்ல;

ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஓங்கு புகழ் பெற்று உலகேத்தும் உயர் நூலைத் தந்த வள்ளுவரைப் போன்றே பாரதியாரும் ஈடு இணையிலாப் புலவராக ஆக்கப்பட்டு விட்டாரே என்பது கூட அல்ல

பாவேந்தர் பாரதிதாசனைப் போலவே பாக்களால்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

'தந்திரம்' பலிக்காமல் மந்திரவாதி ஓட்டம்!

கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த 'முல்பாகல்' என்னும் ஊருக்கு பன்னிரண்டு மைல் தொலைவில் 'யதரூரு' என்ற சிறு கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் இருபத்து மூன்று வயதுடைய ஒரு பணக்கார வாலிபன் இறந்து விட்டான் அவன் இறந்த துக்கத்தைப் பெற்றோர்களாலும் உறவினர்களாலும் தாங்க முடியவில்லை.

பக்கத்து ஊரில் ஒரு மந்திரவாதி இருந்தான், அவன் வந்து அந்தப் பெற்றோர்களிடம் 'உங்கள் மகனை நான் பிழைக்க வைக்கிறேன் — எனக்குத் தக்க சன்மானம் தந்தால்' என்றான். மகன் பிழைத்தால் போதும் என்ற எண்ணத்தில் சரி என்று இசைந்தனர். மகன் பிழைத்தால் ஐம்பதாயிரம் தருவதாகவும் சொன்னார்களாம். கல்லறையில் புதைக்கப்பட்ட சில நாட்களான அந்தப் பிணத்திற்கு உயிரை வரவழைக்க முடியுமா என்று கூட யோசிக்கவில்லை, மந்திரவாதி தன் குரு (மலையாள மந்திரவாதி; கேரளாவில் இருக்கிறாராம்)வின் ஆசீர்வாதத்தால் இறந்தவனைப் பிழைக்க வைக்கிறேன் என்று கூறியதும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை(பூசை செய்யச்) செய்தனர்.

மந்திரவாதி இருபது நாட்கள் பூசை செய்தான். இருபதாம் நாள் (வாலிபன் இறந்த 40-வது நாள்) அந்த வாலிபனுக்கு உயிர்வந்து விடும் என உறுதி கூறியிருந்தான். பூசை விமரிசையாக நடந்தது. இச்செய்தி அக்கம் பக்கத்து ஊர்களுக்கும் எட்டியது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் அந்த அதிசயத்தைக் காண வந்து போயினர். இதற்கு கோலார், முல்பாகல் போன்ற ஊர்களிலிருந்தும் தனி பஸ்களை விட்டிருந்தனர். 40-ம்நாள் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர் – மந்திரவாதி செய்யப் போகும் அதிசயத்தைக் காண! கடைசிக் கட்ட பூசையும் நடந்தது. விஞ்ஞானத்தால் சாதிக்க முடியாததை ஒரு மனிதன் பூசையாலே சாதிக்கப் போகிறானே என்ற ஆச்சரியம் கொண்டிருந்த மக்களுக்கு, பூசை முடிந்தும் வாலிபன் உயிர் பிழைத்து எழாததைக்கண்டு ஒரே ஏமாற்றம், ஆத்திரம் அடைந்த மக்கள் மந்திரவாதியின் மேல் பாய்ந்தார்கள். அவனோ தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடித் தலைமறைவாகி விட்டான். ஆத்திரம் கொண்ட மக்கள் அங்கிருந்த குடிசைகட்குத் தீ வைத்தனர். ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டனர். சாலையில் சென்று கொண்டிருந்த பஸ், லாரி, போன்ற வாகனங்களை நிறுத்திக் கல்லால் அடித்துச்சேதப் படுத்தினர். இதுவரை இத்தகவல் கிடைக்காத காவலர்கள் கலவரம் நடந்தபிறகு அங்கு வந்து அமைதி ஏற்படுத்தினராம். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! இருபதாம் நூற்றாண்டிலும் இப்படிபட்ட மோசடி.

தகவல்: ந. சுந்தர்

டாக்டரை நேரில் சந்திக்க



முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம் உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்

எஸ். காளிமுத்து

R.M.P. (IND. V. V. C. A. I. H.)

பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள் எங்கள் ஆலோசனைகளும் சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்

போன்: 316, 316 ஏ, 420 தந்தி: சித்தர்

நம் நாடு
ஆசிரியர்: மு.கருணாநிதி

'ஆஸ்தான' கவிக்கு ஒரு திறந்த மடல்!

ஆஸ்தான கவிஞரே!

1977-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் வெளி வந்த தங்களது இதழில் 'நான் அறிந்த வரையில் தமிழக நிர்வாகத்தில் அற்புதமான திறமைசாலிகள் இருவரே. கருணாநிதி காமராசர்'' என்று கூறி இருக்கிறீர்கள். 1978-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் வெளிவந்த இதழில் தங்களைப்பற்றி எடைபோட கருணாநிதிக்கே யோக்யதை இல்லை என்று எழுதியிருக்கிறீர்கள்.

அரசவைக் கவிஞரே! விரலை மடக்குங்கள் காலச் சக்கரம் ஒருமுறைதான் சுழன்றிருக்கிறது. ஓராண்டுக்குள் அற்புதமான திறமைசாலி யோக்யதையில்லாத மனிதராக மாறிவிட்டார் 'அண்ணன் காட்டிய வழியம்மா'' என்று எழுதிய கரங்கள் தாமே 'அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே என்று எழுதின. அவசரமான, அதுவும் அவசியமான உலகிற்குள் நீங்கள் நுழைந்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம் ஆனால் தங்களைப்பற்றி ஒரு சொல்லேனும் உரைக்காத எங்கள் கலைஞரைச் சாடுவது யாரை நிறைவு செய்திட?

உங்களைப்பற்றிப் பேசக் கலைஞருக்குத் தகுதியில்லையோ? 'கருணாநிதி என் காதலி என்று கவிதை எழுதிவிட்டு இன்று அத் தலைவரைக் காரணமின்றி ஏசுவதுதான் தாங்கள் கொண்டுள்ள தகுதி என்றால் அத்தகுதி எங்கள் தலைவனிடம் இல்லை

'எம் ஜி ஆரின் உள்ளும் புறமும்' என்று நூல் வெளியிட்டு அவரை ஊர் சிரிக்கவைத்து இன்று எதற்காகவோ அவரை வானுயரப் புகழ்வதுதான் தாங்கள் வேண்டும் தகுதி என்றால் அத்தகுதி எங்கள் தலைவரிடம் இல்லை.

பதவி வந்ததும் பழகியவர்களைப் பழித்தும் இழித்தும் பேசிப் பகைவர்களாக்குவது தான் தாங்கள் நாடும் தகுதி என்றால். அத்தகுதி எங்கள் தலைவரிடம் இல்லை இல்லவே இல்லை

கூசாமல் கலைஞரை ஏசுகிறீர்களே அவர் என்றாவது. எங்காவது தங்களைப் பற்றிப் பேசியிருக்கிறாரா? அல்லது எழுதியிருக்கிறாரா? உங்களுக்கு அவர் தகுதியற்றவராகத் தெரியலாம் ஆனால் எங்கட்கு அவர் ஒரு மாபெரும்தலைவர்! அவர்ஒரு புகழேந்தி. புறம் பேசி அல்ல அவர் ஒரு சரித்திரம். எங்களை ஆளும் அன்பிற்குரியவர் மாணிக்கத் தீபம். அவர் தமிழால் வாழ்பவர் சிலரைப்போலச் சிவப்பு விளக்குக் கதைகள் எழுதிச் செல்வம் சேர்த்தவரல்லர். கன்னியரைக் காமக்கவிதையின் கருப்பொருளாய் வைத்துக் காசு சேர்த்தவரல்லர். வனிதையரை வழுக்கு விழுந்தவராய்க் காட்டி வகை வகையாய்க் கதை யெழுதி வாழ்வை அமைத்தவரல்லர்.

அரசவைக் கவிஞரே! மலைக்கருகில் நின்று ஒலியெழுப்பினால் உரைத்தவனையே அவ்வொலி அடைவதில்லையா? கலைஞர் என்னும் மலையை நோக்கி நீங்கள் எழுப்பும் ஒலி தவறாமல் தங்களை வந்தடையும் நல்லன உரைப்பீர்களோ? அல்லன உரைப்பீர்களோ? சிந்தித்துச் செயல்படுக மலைமேல் பழிபோட வேண்டாம்'

'நாக்கினால் ஊரையே நாட்டித்
திரட்டுவான்
நாக்குக்கும் வெற்றி தந்து
நாடகக்காரனின் வேடத்தில் நின்றவன்
நடிப்புக்கும் வெற்றி தந்து .....'

என்றெழுதிய அரசவைக் கவிஞரே' எங்கள் நெஞ்சக் கோவிலில் சிலையாகி விட்ட, நினைவுக் கடலில் நிலையாகி விட்ட தமிழினத் தலைவரை விலையாகி விட்ட ஒருவர் ஏசுவது அழகல்ல. அதுவும் அரசவைக் கவிஞரான தங்களுக்குச் சிறிதும் அழகல்ல

வணக்கம்.
இராசை நரேந்திரகுமார்

புனித ராஜ்யம்...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

கன்னங்களில் மாறி மாறி அடிக்கின்றனர்.)

''அடகிழ நாயே' யாரிடம் உன் வாலை ஆட்டுகிருய்? போனால் போகிற தென்று ஊர்விவகாரம் பேச உன்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தால் நீ அப் பழுக்கற்ற எங்களைப் பார்த்து, கறைபடியாத எங்கள் கரங்களைப் பார்த்து— குறை சொல்லிக் குரைக்கிருயா ?'' என்று நொண்டி கர்ச்சனை செய்கிருன்.

(அடி தாங்காத முதியவர் கீழே சாய்கிருர். அண்ணுச்சி, நொண்டி, பொடியன் மூவரும் உரக்கச் சிரித்தவாறு அந்த இடத்தை விட்டுச் செல்கின்றனர். அப்போது ''தாத்தா! தாத்தா'' என்று வீறிட்டு அலறியவாறு சொக்கி ஓடிவந்து நல்லானைத் தூக்குகிருள்]

நல்லான்: அம்மா சொக்கி, எல்லாம் முடிஞ்சுட்டுதம்மா! உன் வருகைக்காகத்தான் என் இறுதி மூச்சு காத்துக்கிட்டு இருந்துதம்மா! இனி நான் பிழைக்கமுடியாது. ஆனு ஒரு மகிழ்ச்சி' எனக்கு. ஊரை ஏமாத்திகிட்டு உத்தமனைப் போல நடிச்சவனுங்களை ஊர் மக்களுக்கு அடையாளம் காட்டிட்டேன்...சொக்கி! நான்ஒருதப்புப் பண்ணிட்டேன். உன்னை அவனுககிட்ட உளவாளியா அனுப்பியிருந்ததை பகிரங்கமா சொல்லிட்டேன் அதனலை உனக்கு ஆபத்துக் காத்துகிட்டு இருக்கும் அம்மா. ... நீ, எங்கேயாவது ஓடிடு!... பட்டணத்திலே உங்க அத்தை வீட்டுக்குப் போய்டும்மா!..... அப்பதான் நீ, தப்பிக்கலாம்.... சொக்கி! சொக்கி!!

சொக்கி: தாத்தா தாத்தா'
(சொக்கி மடியில் நல்லான் உயிர் விடுகிருர். காட்சி முடிகிறது.)

[திரை விழுகிறது]

குள்ள நெஞ்சினர் கூறுவரா?]

தமிழ் நெஞ்சங்களை ஆட்சி புரியும் பாரதியின் உருவப் படம் இடம் பெற்ற இடத்தில் புரட்சிக் கவிஞராம் பாரதிதாசன் அவர்களின் உருவப்படமும் இடம் பெறவில்லையே. அது ஏன் என்பது தான் நமது வினா!

[11 ம் பக்கத் தொடர்ச்சி

பாரதி தொடாமுடியாத இடங்களை யெல்லாம் தன் கற்பனையால் தொட்டுக் கவிதையை வளர்த்த புரட்சிக் கவிஞரின் படம் இடம் பெறாமைக்கு என்ன காரணம்? எவர் காரணம்?

பாரதியை விடப் பல்லாயிரம் பாடல்களை எல்லாத் துறைகளிலும் எழுதிக் குவித்த புத்துலகப் புலவனின் சிங்கத் திருவுருவம் சிறிய அளவிலாவது இடம் பெறாமல் போனதுக்கு என்ன காரணம்? எவர் காரணம்?

எந்த நிலையில், எந்த வகையில் பாரதியை விடப் பாவேந்தன் கவிதைத் தகுதியில் குறைந்தவன்.

தீந்தமிழ்க் காவியத்திலிருந்து திரைப்பட உரையாடல் வரை தனக்கென விருக்கும். தனிமுத்திரையைப் பொறித்துள்ள தலை மகனின் திருவுருவப் படம் இடம்பெற முடியாத நிலைமைக்குக் காரணமானவர்கள் சொல்லியுள்ள காரணந்தான் என்ன!

இதிலும் தீண்டாமையா? இதிலும் உயர்வு தாழ்வா?

காரணத்தைக் கூற வேண்டியவர்கள் கூற விட்டாலும், கேட்டுப் பெற—வேண்டிய ஒரு காலம் வராமலா போகும்!

அப்போது...?
அந்தக் காலம் வரட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை.600018 தொலைபேசி 441003